இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 212 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 30 – புதன்கிழமை 13 மார்ச் 2024 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 212 : Thiruvalluvar Year - 2055 - Maasi 30 - Wednesday 13 March 2024 - Dak 16 Pages ₹ 5.00

## தேர்தல் அரசியலுக்காக ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது!

# தமிழ்நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வராது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மார்ச் 13 -**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசு நடைமுறைப்படுத்தியுள்ள குடியுரிமை திருத்தச் சட்டம் (CITIZENSHIP AMENDMENT ACT (CAA) இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது; எனவே தமிழ்நாட்டில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய இறுதி நாட்களில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இருந்துவரும் வேளையில், பல்வேறு தரப்பு மக்களாலும் எதிர்க்கப்பட்ட, குடியுரிமை திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்திட அவசர கதியில் நேற்று அறிவிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

### மதச்சார்பற்ற தன்மைக்கு முற்றிலும் எதிரானது!

இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு முற்றிலும் எதிரானது மட்டுமல்ல; பலவகையான மொழி, இன, மதம் மற்றும் வாழ்விட சூழல் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும், ஒன்றுபட்ட உணர்வுடன் வாழ்ந்துவரும் இந்திய மக்களின் நலனுக்கும், இந்திய தாய்த் திருநாட்டின் பன்முகத் தன்மைக்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

அதுமட்டுமல்ல; சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் முகாம்வாழ் தமிழர்களின் நலனுக்கும் எதிரானதுதான் இந்தச் சட்டம்.

### பல்வேறு மாநிலங்கள் எதிர்ப்புக் குரல்!

இதன் காரணமாகத்தான், கழக அரசு அமைந்தவுடனேயே, அதாவது, கடந்த 8.9.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக, அரசின் சார்பாக நான் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதனை நிறைவேற்றி, இச்சட்டத்தினைத் திரும்பப் பெறவேண்டுமென வலியுறுத்தி ஒன்றிய அரசுக்கு அதனை அனுப்பி வைத்தோம். தமிழ்நாட்டைப் போலவே, பல்வேறு மாநிலங்களும் இதனை எதிர்த்து குரல் கொடுத்து வந்துள்ளன.

> **உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திலிருந்து தப்பிப்பதற்காக மக்களை திசைதிருப்பும் நோக்கத்துடன், தேர்தல் அரசியலுக்காக இந்தச் சட்டத்தை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதோ என கருத வேண்டியிருக்கிறது.**

இந்த நிலையில், உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திலிருந்து தப்பிப்பதற்காக மக்களை திசை திருப்பும் நோக்கத்துடன், தேர்தல் அரசியலுக்காக இந்தச் சட்டத்தை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதோ என கருத வேண்டியிருக்கிறது.

### தேவையற்ற ஒன்று இரத்து செய்யப்பட வேண்டியது!

இந்திய மக்களிடையே பேதங்களைத் தோற்றுவிக்க வழிவகை செய்யும் இந்தச் சட்டத்தால் எந்த விதமான நன்மையோ, பயனோ இருக்கப் போவதில்லை. இந்தச் சட்டம் முற்றிலும் தேவையற்ற ஒன்று என்பதுடன், இரத்து செய்யப்பட வேண்டியது என்பது தான் இந்த அரசின் கருத்தாகும்.

எனவே, ஒன்றிய அரசு நிறைவேற்றியிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றிட தமிழ்நாடு அரசு எவ்வகையிலும் இடமளிக்காது; இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு சட்டத்திற்கும் தமிழ்நாடு அரசு இடம் கொடுக்காது என்பதனை தமிழ்நாட்டு மக்களுக்கு நான் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (12.3.2024) தலைமைச் செயலகத்தில், மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள பதினோரு (11) ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தார். இந்த நிகழ்வின்போது, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா உள்ளார்.

### கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இஸ்லாமியர்களுக்கு

## ரமலான் நோன்பு திறப்புக்காக நலத்திட்ட உதவிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, மார்ச் 13-*

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இஸ்லாமியர்களுக்கு ரமலான் நோன்பு திறப்பிற்காக நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.3.2024) முகாம் அலுவலகத்தில், “உதவுதல் நம் முதல் கடமை” என்ற பெயரில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 2000 இஸ்லாமியர்களுக்கு ரமலான் நோன்பு திறப்பிற்காக 26 கிலோ அரிசி, துணிமணிகள், பேரிச்சம்பழம், நிதிஉதவி அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பரிசுத் தொகைப்பினை பெற்றுக் கொண்ட இஸ்லாமியப் பெருமக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வருவதற்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

## “ஒரே தேசம், ஒரே தேர்தல்” என்பது நாட்டின்

# கூட்டாட்சி கட்டமைப்பை அடியோடு தகர்க்கும் முயற்சி!

## “தடம் புரண்ட மதச்சார்பின்மையும் கூட்டாட்சியும்” என்ற கருத்தரங்கில் அமைச்சர் துரைமுருகன் உரை!

**சென்னை, மார்ச் 13 -**

**“ஒரே தேசம், ஒரே தேர்தல்” என்பது நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை அடியோடு சாய்க்கும் அப்பட்டமான முயற்சி” என்று கழகப் பொதுச் செயலாளரும் நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கூறியுள்ளார்.**

“Indian Democracy at Cross Roads” **என்ற கூட்டத் தொடரில் “தடம் புரண்ட மதச் சார்பின்மையும் கூட்டாட்சி யும்” என்ற தலைப்பில் மார்ச் 11 - அன்று தியாகராயர் நகரிலுள்ள பிட்டி.தியாகராயர் அரங்கில் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியதாவது:-

முதலாவதாக, “மதச்சார்பின்மையும் கூட்டாட்சியும் தடம் புரண்டது” என்ற மிக முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிக்க இங்கு வந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த தலைப்பு நம் நாட்டின் தற்போதைய நிலையை விவரிக்கிறது.

“வேற்றுமையில் ஒற்றுமை” என்ற நிர்மாண முழக்கங்களில் அமைக்கப்பட்ட நாடு, பிரித்தாளும் பா.ஜ.க அரசாங்கத்தால் துண்டாடப்படுகிறது. இன, மொழி மற்றும் மத வேறுபாடுகளை எதிர்கொண்டு ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தியது மற்றும் இந்தியா என்ற ஒரே கூரையின் கீழ் நமது பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்ததால் இந்திய அரசியலமைப்பு சட்டம் தனித்தன்மை வாய்ந்தது என்று அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த சிற்பிகள் தெரிவித்துள்ளனர்.

### பா.ஜ.க. எம்.பி.யின் பேச்சு!

இந்நிலையில், நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய கர்நாடக பா.ஜ.க எம்.பி, அனந்த்குமார் ஹெக்டே, இந்துக்களுக்கு ஆதரவாக செயல்பட “மதச்சார்பற்ற” என்ற வார்த்தையை அரசியல் சாசனத்தில் இருந்து நீக்கலாம் என்று கூறினார்.

இது என்ன வகையான கருத்து? இந்த நாடு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று



விரும்புகிறார்கள். அவர்களுக்கு ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற ஆசை இல்லை, ஆனால் பிரித்துவைக்க மட்டுமே ஆசை.

இந்திய அரசியலமைப்பு இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், நாட்டின் மதச்சார்பின்மை மற்றும் கூட்டாட்சி அமைப்பை அழிக்க எதையும் செய்வார்கள்.

### மத்திய அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன!

மாநிலங்கள் வலுப்பெற்ற பிறகுதான் ஒரு நாடு வலுவாக மாறும், ஆனால் இங்கு மாநிலங்களை பின்னுக்கு இழுக்கவும், அதிகாரங்களை குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரே மதம், ஒரே மொழி, ஒரே குரல், ஒரே தேர்தல் என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. ஆங்கிலேயர்களின் காலத்தில் கூட அதிகாரம் இது போன்ற ஒரு நிறுவனத்தை மையமாகக் கொண்டிருக்கவில்லை.

மாநிலங்களை வலுவிழக்கச் செய்யவும், அவற்றின் பங்கைக் குறைக்கவும் அனைத்து முயற்சி களும் மேற்கொள்ளப்படுகின்றன. நீங்கள் அவர்களுடன் உடன்பட்டால் அது மிகவும் நல்லது. நீங்கள் உடன்படவில்லை என்றால், அவர்கள் உங்களை பலவீனப்படுத்த எல்லா வழிகளையும் பயன்படுத்துகிறார்கள். பா.ஜ. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் இரண்டாம் தரமாக நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் நன் மதிப்பினை குறைக்கும் கருவியாக சி.பி.ஐ, அமலாக்கத்துறை மற்றும் ஆளுநர் போன்ற மத்திய அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு சமீபத்திய உதாரணம், “ஒரே தேசம், ஒரே தேர்தல்” அரசாங்கத்தின் பல்வேறு நிலைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், இது நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை அடியோடு சாய்க்கும் அப்பட்டமான முயற்சி ஆகும்.

உள்ளாட்சித் தேர்தல் என்பது மாநிலப் பட்டியலின் கீழ் மட்டுமே வரும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ஒன்றிய அரசு எங்கிருந்து அதிகாரம் பெறுகிறது? உள்ளாட்சித் தேர்தலில் அவர்களுக்கு எந்த கருத்தும் இருக்கக்கூடாது, ஆனால் உள்ளாட்சி

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 13-03-2024

# தேர்தல் நேரத்தில் மட்டும் விலை குறையும்!

**வீட்டுப் பயன்பாட்டு சிலிண்டரின் விலை தேர்தல் நேரத்தில் மட்டும் குறையும் வகையில் ‘செட்’ செய்து வைத்துள்ளார் பிரதமர் நரேந்திரமோடி. அவர் பிரதமராக வந்தது முதல் சிலிண்டர் விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. தேர்தல் நேரம் வந்து விட்டால் மட்டும் ‘அதுவாகவே’ குறைந்து விடும்!**

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் தேதி அட்டவணை விரைவில் வெளியாக உள்ள நிலையில், தோல்வி பயத்தில் உள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு, சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைத்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்துக்காக என்றால் 2023 இல், 2022 இல், 2021 இல், 2020 இல் சர்வதேச மகளிர் தினம் வரவில்லையா? அல்லது பெண்கள் சிலிண்டர் வாங்கவில்லையா?

மகளிர் தினத்துக்காக சிலிண்டர் விலையைக் குறைக்கிறேன் என்பதே பிற்போக்குத்தனம் இல்லையா? பெண்ணின் அடையாளம் சமையலறை சிலிண்டர்தானா?

**2013 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 410 ரூபாய்!**

**2014 ஆம் ஆண்டு மோடி, பிரதமராக வருகிறார்!**

**2014 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 414 ரூபாய்!**

**2015 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 452 ரூபாய்!**

**2016 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 432 ரூபாய்!**

**2017 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 495 ரூபாய்!**

**2018 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 500 ரூபாய்!**

**2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடக்கப் போகிறது. சிலிண்டர் விலையைக் குறைத்துவிட்டதாகக் காட்ட பிரதமர் கண்துடைப்பு நாடகம் ஆடினார். 2019 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னதாக 495 ரூபாய் என 5 ரூபாய் விலை குறைக்கப்பட்டது.**

இதே ஆண்டில் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தார். ஓட்டுப் போட்ட மக்களை அவரே பழிவாங்கத் தொடங்கினார்.

**2020 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 694 ரூபாய் ஆக ஆனது!**

**2021 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 889 ரூபாய் ஆனது!**

**2022 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 1053 ரூபாய் ஆனது!**

**2023 ஆம் ஆண்டு சிலிண்டர் விலை 1103 ரூபாய் ஆனது.**

**ஐந்து மாநிலத் தேர்தல் வந்ததும் சிலிண்டர் விலையைக் குறைத்தார் பிரதமர். சிலிண்டர் விலை 910 ரூபாய் ஆனது!**

**இப்போது நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. சிலிண்டர் விலையை 810 ரூபாய் ஆக்கிவிட்டார் பிரதமர். தேர்தல் முடிந்துதான் ஆட்சிக்கு வந்தால் 1500 ரூபாய் ஆக்கிவிடுவார் மோடி.**

இப்படி ஒரு கபட நாடகத்தை எந்தக் கூச்சமும் இல்லாமல் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். 410 ரூபாயாக இருந்த சிலிண்டர் விலையை 1103 ரூபாய்க்கு மூன்று மடங்கு உயர்த்தியதுதான் பிரதமர் மோடி அரசின் சாதனையாகும். இதை விட மத்தியதர மக்களை பழிவாங்க முடியாது. பத்தாண்டு காலமாக இதை இரக்கமற்றுச் செய்து விட்டு, தேர்தலுக்காக 100 ரூபாய் குறைக்கிறேன் என்பது அரசியல் நாடகம் இல்லாமல் வேறென்ன? குறைப்பதாக இருந்தால் பாதி விலைக்கு குறைக்க வேண்டியதுதானே? யார் தடுத்தார்கள்?

2021 ஆம் ஆண்டு சூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் என மாதம் தோறும் உயர்த்தப்பட்டது.

2022 மே மாதம் மட்டும் 2 முறை வீட்டு உபயோக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்ட நிலையில் சூன் மாதமும் உயர்த்தப்பட்டது. சூலையிலும் உயர்த்தப்பட்டது.

சிலிண்டர் விலையைக் குறை என்றால் அது எங்கள் கையில் இல்லை, பொதுத்துறை நிறுவனங்கள்தான் குறைக்க வேண்டும் என்பார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் இந்த நிறுவனங்கள் வாயைப் பொத்திக் கொண்டு இருந்துவிடும். விலைகளை இவர்கள் விருப்பத்துக்கு குறைத்துக்கொள்வார்கள். சந்தையின் நிலைமைக்கு ஏற்ப எண்ணெய் நிறுவனங்களே அதன் விலையைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்று சொன்னது யார்? பா.ஜ.க. ஆட்சிதான்.

2014-ம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்றபோது சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை 106 டாலராக இருந்தது. அப்போது சமையல் சிலிண்டர் விலை 410 ரூபாய் மட்டுமே. ஆனால், தற்போது சர்வதேச கச்சா எண்ணெய் விலை 86 டாலராக குறைந்துள்ள நிலையில், சிலிண்டர் விலையை ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்தி மக்கள் தலையில் சுமையைக் கட்டியது மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு.

சிலிண்டர் விலை உயரும் போது காங்கிரசு ஆட்சி காலத்தில் மானியம் இருந்தது. அதனை நாங்கள் பணமாகத் தரப்போகிறோம் என்று முதலில் சொன்னது பா.ஜ.க. அரசு. 563 ரூபாயாக இருந்த மானியம், இன்று 25 ரூபாயாக தேய்ந்துவிட்டது.

கேட்டால் கோடிக்கணக்கான மக்களுக்கு புதிய கேஸ் இணைப்பு தந்து விட்டதை சாதனையாக பா.ஜ.க. சொல்கிறது. சமீபத்திய ஆய்வின்படி இந்த திட்டத்தில் இணைப்பு பெற்ற 92 சதவிகித மக்கள் காஸ் சிலிண்டரை ரீஃபில் செய்வதே கிடையாது. எட்டு சதவிகித மக்கள்தான் ரீஃபில் செய்கிறார்கள். எனவே, ‘பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தை’ பிரதான் மந்திரி புஸ்வாணத் திட்டம் என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.3.2024) முகாம் அலுவலகத்தில், “உதவுதல் நம் முதல் கடமை” என்ற பெயரில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 2000 இஸ்லாமியர்களுக்கு ரமலான் நோன்பு திறப்பிற்காக 26 கிலோ அரிசி, துணிமணிகள், பேரிச்சம்பழம், நிதிஉதவி அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

### அரசு அலுவலர்கள் – ஆசிரியர்களுக்கு 46 சதவீதமாக உள்ள

# அகவிலைப்படி 50 சதவிகிதமாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 13 - அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 46 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 1.1.2024 முதல் 50 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

மக்கள் நலன் கருதி தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தும் பல முன்னோடித் திட்டங்களை நாடே வியந்து பார்க்கும் வகையில் நடைமுறைபடுத்துவதில் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு இடையே அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை முதலமைச்சர் கனிவுடன் பரிசீலித்து, 01.07.2023 முதல் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும்போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கிட அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

**1.1.2024 முதல் வழங்கப்படும்!**

அவ்வகையில், ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.01.2024 முதல் 46 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 50 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில், மாநில அரசு பணியாளர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 46 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 4 சதவீதம் உயர்த்தி 50 சதவீதமாக 01.01.2024 முதல் உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள். ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய். 2587.91கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் கூறியுள்ளார்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# மீனவர்களையும் - மீன்பிடி படகுகளையும் விடுவித்திட உடனடி நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 13 - இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 22 மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர் களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினர் 10.3.2024 அன்று, இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் மூன்று மீன்பிடி விசைப்படகுகளை சிறை பிடித்துள்ளதோடு, 22 மீனவர்களை கைது செய்துள்ளதாகக் குறிப்பிட்டு, இது நமது நாட்டு மீனவர்களின் நலனைப் பாதிக்கும் பெரும் கவலைக்குரிய சம்பவம் என்பதால், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாக தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

நமது மீனவர்கள் பல தலைமுறைகளாக நமது நாட்டிற்கு அருகே உள்ள கடற்பரப்பில் பாரம்பரியமாக மீன்பிடித்து வருகின்றனர் என்றும், மீன்பிடித் தொழில்தான் அவர்களது வாழ்வாதாரமாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், சமீபகாலமாக அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத் தப்படுவதும், கைது செய்யப்படுவதும் அவர்களது மீன்பிடிப் படகுகள் சிறை பிடிக்கப்படுவதும் அதிகரித்து வருவதாகக் கவலையோடு குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கைது நடவடிக்கைகள், பாதிக்கப்படும் மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் பெரும் துயரத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பெருமளவில் பாதிப்பதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, உணர்வுப்பூர்வமான இந்தப் பிரச்சினையின் தன்மையைக் கருத்தில்கொண்டு, மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட விரைவாகவும், தீர்க்கமாகவும் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.



சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், நேற்று (12.03.2024) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மே தினப் பூங்கா விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காலை உணவு - மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட

# மாநிலத் திட்டக்குழுவின் ஆய்வு அறிக்கைகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 13-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (12.3.2024) தலைமைச் செயலகத்தில், மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள பதினோரு (11) ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தார். இவற்றில், தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டங்களான, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகியவற்றின் மீதான மதிப்பீடுகளும் மற்றும் பழங்குடி சமுதாயத்தினர் நிலை, பல்கலைக்கழகங்களின் வினாத்தாள்கள் தரம், கால நிலை மாற்றம், வனம் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய கருப்பொருள்களின் மீதான ஆய்வு அறிக்கைகளும் இடம் பெற்றுள்ளன.**

முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநிலத் திட்டக்குழு செயல்பட்டு வருகிறது. அரசின் சிறப்புத் திட்டங்களை மதிப்பீடுசெய்வது, பல்வேறு கருப்பொருள்களில் ஆய்வு மேற்கொள்வது மற்றும் மாநிலத்தில் நிலவிவரும் பல்வேறு சவால்களுக்கும், வாய்ப்புகளுக்கும் தகுந்த கொள்கைகளை வடிவமைப்பது உள்ளிட்டவை மாநிலத் திட்டக்குழுவின் செயல்பாடுகளாகும்.

அந்த வகையில், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள பதினோரு ஆய்வு அறிக்கைகள் முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ஆய்வறிக்கைகளின் விவரம்:

**1. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இத்திட்டத்தினால் அரசு தொடக்க பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம்**

இந்த ஆய்வின் முதல்கட்ட அறிக்கையில், இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு, அதன் அளவு, மாணவர்களின் கல்வி மற்றும் உடல் செயல்பாடுகள் குறித்து பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாட்டில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான பராமரிப்பு குறித்த மதிப்பீட்டு ஆய்வு**

இந்த மதிப்பீட்டு ஆய்வானது மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், கண்டறியப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ள தொற்றா நோயுற்ற மக்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ சேவைகளையும், அவர்களுக்கு மருந்துகள் தொடர்ந்து வழங்கப்பட்டதனையும் கண்டறியும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

**3. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் செயலாக்கம் குறித்த ஓர் மதிப்பீட்டாய்வு**

தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் தேவையையும் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களின் முன்னுரிமைகளுக்கேற்ப இத்திட்டம் இயைந்து செயல்படத்தக்க வகையில், மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களையும் குறித்து இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

**4. தமிழ்நாட்டின் பழங்குடி கிராமங்களில் அரசு திட்டங்களின் செயல்படுத்தல் திறன் மீதான மதிப்பீட்டு ஆய்வு**

இந்த அறிக்கை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பழங்குடியினரின் குடியிருப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசின் திட்டங்கள் பழங்குடியினரைச் சென்று அடைகிறதா என்பதையும், அவற்றின் பலன்கள் மற்றும் அவற்றால் அவர்களின் வாழ்வில் அடைந்த முன்னேற்ற நிலை குறித்த ஆய்வின் அறிக்கை ஆகும்.

**5. தமிழ்நாட்டில் உள்ள மாநிலப் பல்கலைக்கழகங்களின் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் படிப்புகளின் பருவ இறுதி தேர்வு வினாத்தாள்கள் மீதான மதிப்பீட்டாய்வு**

கலை, அறிவியல் மற்றும் பொறியியல் பாடப் பிரிவுகளின் இளநிலை பட்டப்படிப்புகளுக்கான, பல்கலைக்கழகங்களால் வடிவமைக்கப்படும் பருவ இறுதி வினா த்தாள்களின் தரத்தின் மீதான ஒரு மதிப்பீட்டாய்வு ஆகும். மாணவர்களின் கற்றல் வெளிப்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, பருவ இறுதி வினாத்தாள்களின் தரத்தில் தேவைப்படும் மாற்றங்களை இந்த அறிக்கை விவரிக்கிறது.

**6. தமிழ்நாடு வெப்பத் தணிப்பு உத்தி**

கோடை காலம் நெருங்கி வருவதால், இந்த ஆவணம் தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டிய வெப்பத் தணிப்பு உத்திகளை தொகுத்து வழங்கியுள்ளது. இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்பட வேண்டியவை ஆகும்.

**7. குறைந்த உமிழ்வு மண்டலம் - சென்னைக்கான செயலாக்க உத்திகள்**

மாசு உமிழ்வைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் இந்த அறிக்கை, நகரங்களில் "குறைந்த உமிழ்வு மண்டலம்" உருவாக்க வேண்டியதன் அவசியத்தை கோடிட்டுக் காட்டுகிறது. இங்கிலாந்து நாட்டில் உள்ள இதேபோன்ற செயலாக்க உத்திகளின் (Toolkit) அடிப்படையில், சென்னை போன்ற பெருநகரங்களில் இத்தகைய செயலாக்க உத்திகளை எவ்வாறு பின்பற்றலாம் என்பதை இந்த அறிக்கை விவரிக்கிறது.

**8. தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் சீமைக்கருவேல மரங்களின் மேலாண்மை**

சீமைக்கருவேல மரங்களின் பரவலைக் கருத்தில் கொண்டு, இந்த அறிக்கை வாழ்வாதார வாய்ப்புகளை சமரசம் செய்யாமல் சுற்றுச்சூழல் சீரழிவைக் குறைப்பதற்கான அறிவியல் தீர்வுகளையும், அவற்றிற்கு சாத்தியமான வழிகளையும் உத்திகளையும் பரிந்துரைக்கிறது.

**9. தமிழ்நாட்டில் வன ஆக்கிரமிப்பு இனங்களின் மேலாண்மை**

இந்த அறிக்கையில் தமிழ்நாட்டின் வனத்தை ஆக்கிரமித்துள்ள அந்நியகளை, தாவரங்கள் மற்றும் மர இனங்களை மேலாண்மை செய்வதற்கான அறிவியல், கொள்கைகள் மற்றும் சட்ட அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளது. மாநிலத்தின் வனப்பகுதிகளின் தரம் மற்றும் வளமான பல்லுயிர் பெருக்கத்தை உறுதிசெய்வதற்கான பயனுள்ள மேலாண்மை உத்திகளை இது வலியுறுத்துகிறது.

**10. தமிழ்நாட்டின் நிலையான கடற்பாசி விவசாயம் முன்னோக்கி செல்லும்வழி**

உள்நாட்டு கடற்பாசி விவசாயத்தை நிலையான முறையில் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை தெளிவுபடுத்துவதும், மேலும் தமிழ்நாட்டில் கடலோர பெண்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கும் சாத்தியமான வழிகளை முன்னிலைப்படுத்துவது இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

**11. தமிழ்நாட்டில் காடுகளின் நிலை**

இந்த அறிக்கை இந்திய வன ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்திய வனங்களின் நிலை என்ற ஈராண்டுக்கு ஒரு முறை வெளியிடும் அறிக்கையிலிருந்து, தமிழ்நாடு குறித்த தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு ஆகும். அதனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வறிக்கை 2001 முதல் 2021 வரை தமிழ்நாட்டில் உள்ள வனம் மற்றும் பசுமை போர்வையை பகுப்பாய்வுச் செய்து மாவட்ட வாரியாக ஆராய்ந்துள்ளது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் உரை...

### முதல் பக்கத் தொடர்ச்சி

தேர்தலுடன், நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து ஆலோசிக்க உயர்மட்ட குழுவை அமைத்துள்ளனர். இதனால் தான் இந்த பா.ஜ.க வின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக தி.மு.க. அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் கருத்துக்கு எதிராக மாநில சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

**நிதி ஒதுக்குவதில் பெரும் ஏற்றத்தாழ்வு!**

மேலும், பா.ஜ.க அல்லாத மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும் பெரும் ஏற்றத்தாழ்வு உள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம், நிதி ஆணையத்தின் அடிப்படையில் தான் நிதி ஒதுக்கப்படுகிறது என்று சொல்வார்கள். உண்மையில், நிதி ஆணையம் அமைக்கப்பட்டு, அவற்றின் விதிமுறைகள், மாநில அரசுடன் எந்த ஆலோசனையும் இன்றி மத்திய அரசால் தீர்மானிக்கப்படுகின்றன.

வளைந்து கொடுக்கும் பரிந்துரைகளை பி.ஜே.பிக்கு ஆதரவாக அதாவது மத்திய அரசு தனக்கென விகிதாசாரமற்ற வளங்களைத் தக்கவைத்துக்கொண்டது, காலப் போக்கில் அது பகிர்ந்தளிக்கப்பட்ட மாநிலப்பங்கைக்கூட பிற்போக்குத்தனமான நிலைமைகளுக்கு உட்படுத்தியது.

இந்த விஷயத்தை மேலும் மோசமாக்கும் வகையில், செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் சேகரிக்கப்பட்ட வளங்களின் பெரும்பகுதி, நிதி ஆணையத்தின் வரம்பிற்கு வெளியே வைக்கப்பட்டு, மத்திய அரசுக்கு பாகுபாடு காட்ட தடையற்ற அதிகாரத்தை அளித்தது திட்டக் குழு, தேசிய வளர்ச்சி குழு ஆகியவை ஒழிக்கப்பட்டன.

**மின்கட்டணத்தை உயர்த்த கட்டாயப்படுத்தப்பட்டது!**

ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட மது மீதான விற்பனை வரிகள் மற்றும் எரிபொருளின் மீதான கலால் வரிகள் தவிர, மாநில அரசுகள் தங்களின் சொந்த வருவாயை உயர்த்திக் கொள்ளும் திறனையும் ஜிஎஸ்டி கடுமையாக பாதித்துள்ளது. மாநில அரசுகள் பாதிக்கும் மேலான வருவாய்க்கு இப்போது மத்திய அரசையை சார்ந்திருக்கின்றன. அவர்களின் வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய அரசும் இந்திய ரிசர்வ் வங்கியும் கடன்நிதி செலவினங்களைக் கட்டுப்படுத்த நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. அரசு நிதியுதவி பெற்ற கார்ப்பரேட் நிறுவனங்களால் கடன் வாங்குவதன் மூலம் கூடுதல் வரவுசெலவு வளங்களை திரட்டும் முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன.

Covid -19 தொற்று நோய்களின் போது கூட, சுகாதாரம் தொடர்பான செலவினங்களைச் சமாளிக்க மாநிலங்கள் சிரமப்பட்டபோது, மாநில அரசு நடத்தும் விநியோக நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் மீதான கட்டண உயர்வு போன்ற சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கு உட்பட்ட கூடுதல் கடன் வாங்க அனுமதித்தது பிற்போக்கான செயல் ஆகும்.

கூடுதல் கடனைப் வெறுவதற்காக, மாநிலங்களை மின் கட்டணத்தை உயர்த்துமாறு மத்திய அரசு உண்மையில் கட்டாயப்படுத்தியுள்ளது.

மாநில அரசுகள் நலத்திட்ட பணிகளுக்கு நிதியை உருவாக்குவதற்காக பல்வேறு செலவினங்களைக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வாக்காளர் ஆதரவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட ஒப்பிடக்கூடிய திட்டங் களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் விடாமல் நிற்கிறது. அதே போல் பா.ஜ.கவின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில அரசுகளிலும், மத்திய அரசின் சிறப்பு உதவியால் பயனடைகிறது.

இத்தகைய பாரபட்சம் போதாது என்று, சமீபத்திய விவகாரங்களால் மோசமான நிலை அடைந்துள்ளன, இப்போது பா.ஜ.க ஆட்சியில் அரசாங்கமும் மதமும் பின்னிப் பிணைந்துள்ளன. இப்போது அவர்கள் நாடு முழுவதும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை கட்டாயப்படுத்த முயறிசிக்கிறார்கள், அவர்கள் மக்கள் அல்லது மாநில அரசுகளின் கருத்தை கருத்தில் கொள்ள விரும்பவில்லை. குறிப்பிட்ட மதத்தை குறிவைத்து சட்டங்கள் ஆளும் கட்சிக்கு பிரச்சாரத்தை ஒளிபரப்புவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**தி.மு.க. பொறுப்பேற்க வேண்டிய தருணம் இது!**

நம் தேசத்தின் கட்டமைப்பை அழிக்கும் செயல்களைச் செய்ய அவர்கள் எதை செய்யவும் துணிந்துள்ளனர். நாட்டின் எதிர்காலத்திற்காகவும், சமூக நீதி, மதச்சார்பின்மை மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தவும் தி.மு.க பொறுப்பேற்க வேண்டிய தருணம் இது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

### மறைந்த தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள்

## தமிழைப் பரப்புவதை தமது வாழ்நாள் பணியாகக் கொண்டவர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, மார்ச் 13 -

கோவை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் மறைந்த தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள், தமிழைப் பரப்புவதை தமது வாழ்நாள் பணியாகக் கொண்டவர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

கோவை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**கோவை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் தவத்திரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.**

**மேற்கு மண்டலத்தில் ஆன்மீக வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட அப்பழுக்கற்ற துறவியான சிவலிங்கேஸ்வர சுவாமிகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோவில்களுக்கு தமிழில் குடமுழுக்கு நடத்திய பெருமைக்குரியவர்.**

**தமிழைப் பரப்புவதைத் தமது வாழ்நாள் பணியாக மேற்கொண்டு வந்த அவர், பசும்பொன் தேவர் திருமகனார் நினைவிடத்தில் குருபூஜை செய்யும் உரிமையைப் பெற்றவர் ஆவார்.**

**பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்து தமிழ்மொழியைப் பரப்பி வந்த அவர், பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களைத் தங்க வைத்து, அவர்கள் கல்வி கற்க உதவிகளையும் புரிந்து வந்தார்.**

**தொண்டிலும், துறவிலும் சிறந்து விளங்கிய சிவலிங்கேஸ்வர சுவாமிகளின் மறைவு தமிழ்ச் சமயநெறிக்கும், தமிழ்மொழி வழிபாட்டிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.**

**அவரது மறைவால் வாடும் அவரது சீடர்களுக்கும், மாணவர்களுக்கும், சமயப் பற்றாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




இராமநாதபுரம் மாவட்டம் வழக்கறிஞர்கள் அணி சார்பாக கழகத் தலைவர் – முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பரமக்குடி சேதுபதி நகர் பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ – மாணவியருக்கு இனிப்பு மற்றும் நோட்டுப் புத்தகங்கள் – பேனா பென்சில் மற்றும் உணவு வழங்கி கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், பரமக்குடி நகர் மன்றத் தலைவர் சேது கருணாநிதி, வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கருணாநிதி,மாவட்டத் துணை அமைப்பாளர்கள் கணேசன், காளீஸ்வரன், சரவண பாபு, அரசு வழக்கறிஞர்கள் தமிழ்மாறன், முனியசாமி, ஜான் ராஜதுரை,செந்தில்குமார், ஆர்.எம். கீதா, சபரிநாதன், கணேச பிரபு, மாவட்ட தலைவர் வீரபாண்டியன், முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மூத்த வழக்கறிஞர் சௌமிய நாராயணன் மற்றும் நகர் செயலாளர் ஜீவரத்தினம் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் மாலிக் மற்றும் கழக வழக்கறிஞர்கள், செல்லபாண்டியன், மாடசாமி, ராம் கில்லட்டின், கனகராஜ், பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் மூர்த்தி மற்றும் நகர்கழக நிர்வாகிகள் ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கருணாநிதி ஏற்பாடு செய்திருந்தார்.





சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், தன்னுடைய சொந்த நிதியில் இருந்து நடமாடும் கலைஞர் நூலகத்தை கடந்த ஆண்டு மார்ச் 1ஆம் தேதி முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளில் தொடங்கி வைத்தார். மிகச் சிறப்பாக இயங்கி வரும் இந்த நடமாடும் கலைஞர் நூலகத்தில் ஓராண்டில் 1,000 வாசகர்கள் இணைந்து பயன்பெற்று வருகின்றனர். இந்த வாசகர்களை ஊக்குவிக்கும் விதமாக, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அந்த வாசகர்களோடு உரையாடி, அதிகளவில் புத்தகங்களை எடுத்து படித்த வாசகர்கள் 7 பேருக்கு பரிசுகள் வழங்கி உரையாற்றினார். நடமாடும் கலைஞர் நூலகத்தின் வாசகர்களாக இருக்கும் பல்வேறு மாணவர்கள் தங்களுடைய அனுபவங்களையும், தேவைகளையும் அமைச்சரிடத்தில் பகிர்ந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டக் கழக செயலாளர் சிற்றரசு, பகுதிக்கழக செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் கமலா செழியன், மங்கை ராஜ்குமார், தொகுதி பார்வையாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சி.ஹெச்.சேகர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணியில் உற்சாகம்:

# “நடமாடும் நூலகம் எங்கள் தெருவுக்கு வரும்போது தெருவே திருவிழா போல காட்சியளிக்கும்!”

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – வாசகர்கள் கலந்துரையாடலில் நெகிழ்ச்சி

**சென்னை, மார்ச் 13-**

**‘உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை சார்பில் திருவல்லிக்கேணி-சேப்பாக்கம் தொகுதியில் நடமாடும் நூலகத்தை தொடங்கி ஓராண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி வாசகர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி லேடி வில்லிங்டன் பள்ளியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாசகர்களுடன் கலந்துரையாடினார். அப்போது உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:**



பேரறிஞர் அண்ணாவின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு அனைவரும் படிக்க வேண்டும் என்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். கலைஞரின் நூற்றாண்டு விழாவில் மதுரையில் கலைஞர் நூலகத்தைத் திறந்து வைத்தார் நம் முதலமைச்சர் அவர்கள். கோவையிலும் விரைவில் திறக்க உள்ளார்.

நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் கடந்த மார்ச் மாதம் 1ஆம் தேதி நம் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த நூலகத்தை தொடங்கி வைத்தோம். இந்த நடமாடும் கலைஞர் நூலகத்தைத் தொடங்கி, ஓராண்டு நிறைவடைந்ததை யொட்டி வாசகர்களாகிய உங்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக வந்துள்ளேன்.

இந்த ஒரு வருடத்தில் பல்லாயிரக்கணக்கான பேர் இதில் பயன்பெற்றிருக்கிறீர்கள். இதை இன்னும் நிறைய பேர் பயன்படுத்த வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை. உங்கள் சட்டமன்ற அலுவலக பணியாளர்கள், மற்ற விஷயங்களை யெல்லாம் பேசும் போது, நான் அவர்களிடம் கேட்கின்ற முதல் கேள்வி, ``நூலகம் எந்தெந்த பகுதிகளுக்குச் செல்கிறது. எவ்வளவு பேர் அதன்மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள். எத்தனைப்பேரை நீங்கள் உறுப்பினர்களாகச் சேர்த்திருக்கிறார்கள்.’அதுதான் நான் தொடர்ந்து அவர்களிடம் கேட்கின்ற கேள்வி. நீங்கள் நிறையப் பேர் இதனால் பயனடைந்திருக்கிறீர்கள். இன்னும் நிறைய பேர் பயன்பெற வேண்டும். அதற்கு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதைப் பற்றி நீங்கள் இன்னும் நிறைய பேர்களிடம் சொல்ல வேண்டும்.

இந்த நூலகத்தில் இன்னும் வேறு என்னென்ன புத்தகங்கள் எல்லாம் வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறோம். எனவே, நீங்கள் யாராவது பேச வேண்டும் என்று நினைத்தால், இந்த நூலகத்தைப்பற்றி உங்களுடைய எண்ணங்களை இங்கு பகிரலாம். இதில் தேவைப்படும் வேறு புத்த கங்கள்... போன்ற உங்களின் ஆலோசனைகளை, கருத்துகளை நீங்கள் இங்கு தெரிவிக்கலாம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

நூலகத்தின் மேற்பார்வையாளர், ஓட்டுநர், அதிகமாக புத்தகங்களை எடுத்து பயன்படுத்திய 7 வாசகர்கள் ஆகியோருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நினைவுப் பரிசுகளை வழங்கினார். அதேபோல் கலந்துரையாடலில் பங்கேற்ற அனைத்து வாசகர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் சிற்றரசு, பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் கமலா செழியன், மங்கை ராஜ்குமார், உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை நிர்வாகி பி.கே.பாபு, தொகுதி பார்வையாளர் சி.எச்.சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ், வட்டக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### நடமாடும் கலைஞர் நூலகம்!

## டி.என்.பி.எஸ்.சி. தேர்வுக்காக படிக்க பயனுள்ளதாக உள்ளது!

### வாசகர்களின் நெகிழ்ச்சிமிகு பாராட்டு!

கலந்ரையாடல் நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வாசகர்கள் தங்கள் கருத்துக்களை கூறும்படி தெரிவத்ததைத் தொடர்ந்து வாசகர்கள் கூறியதாவது:–

**ஹர்சிதா:** “நான் 114வது தொகுதியில் இருந்து வந்திருக்கிறேன். நூலகங்களை நாம் தான் தேடிப்போவோம். முதல் முறையாக, நூலகம் நம்மைத்தேடி வரும்போது ரொம்பவே சந்தோஷமாக இருந்தது. இதுமட்டும் இல்லாமல் ஸ்கூல் ஃபீஸிலிருந்து நாங்கள் என்ன கேட்டாலும், எங்களுக்கு உதவி செய்வார். இத்தனை தொகுதிகள் இருக்கும்போது முதல்முறையாக எங்கள் தொகுதியில் தொடங்கியிருக்கிறார். லைப்ரரியில் இல்லாத புத்தகம்கூட கேட்டால், அடுத்த வாரமே எடுத்துக்கொண்டு வரும் அளவிற்கு லைப்ரரி ரொம்ப அப்டேட்டாக இருக்கிறது.”

**தன்யா:** “நான் கடந்த ஒரு வருடமாகப் புத்தகம் படிக்கிறேன். வாழ்க்கை வரலாறு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. என்னுடைய ஆசை என்ன வென்றால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து தொகுதிகளுக்கும் இப்படி ஒரு நூலகம் வேண்டும் என்பதுதான்.”

**மித்ரன்:** “நான், தமிழ்ச் சிறு கதைகள் புத்தகங்களை இந்த நூலகத்தின் மூலம் படித்திருக்கிறேன். வரலாற்றுப் புத்தகங்கள் படித்திருக்கிறேன். எனக்கு இந்த நூலகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவியாக இருக்கிறது.”

**பாத்திமா சாரா:** “நான் முன்பெல்லாம் செல்போன், டி.வி அதிகமாகப் பார்ப்பேன். இப்போது வீட்டுக்குப் பக்கத்திலேயே நூலகம் வருவதால், அதிகமாகப் புத்தகம்தான் படிக்கிறேன்.”

**கனிஷ்கா:** “நான் வார்டு எண் 120 லிருந்து வருகிறேன். நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறேன். முன்பெல்லாம் பெண்கள் என்றாலே எங்கள் வீட்டில் வெளியே அனுப்ப மாட்டார்கள். நான் நூலகத்திற்குச் சென்று புத்தகங்கள் படிக்க வேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தது. முதன்முதலில் இந்த நூலகம் வரும்போது மகிழ்ச்சியாகச் சென்று புத்தகங்கள் வாங்கினேன். இந்த நடமாடும் நூலகம் எங்கள் தெருவில் வரும்போது எங்கள் தெரு திருவிழாப்போலக் காட்சியளிக்கும்.”

**ஏஞ்சலின் பாத்திமா**: “இந்த நூலகம் வரும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். முன்பெல்லாம் ஆங்கிலமே எனக்குத் தெரியாது. இப்போது இந்த நூலகத்தில் இருக்கின்ற புத்தகங்களைப் படித்து எனக்கு ஆங்கிலம் நன்றாக படிக்க முடிகிறது.”

**கீர்த்திகா:** “நீங்கள் நிறைய உதவி செய்திருக்கிறீர்கள். கல்விக் கட்டணம் கட்டுவதற்கு, குடிநீர் திட்டம் போன்றவைகளெல்லாம் செய்திருக்கிறீர்கள். டி.என்.பி.எஸ்.சிக்காக நான் படிக்க இந்த நூலகம் பயனுள்ளதாக இருக்கிறது. UPSC புத்தகம் இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.”





திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் நகர கழகத்தின் சார்பில் எல்லோருக்கும் எல்லாம் என்ற தலைப்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் திராவிட நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், நகர கழக செயலாளர் எஸ். முருகானந்தம் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தலைமைக் கழக பேச்சாளர் டான் அசோக், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மாதவரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

*சென்னை, மார்ச் 13-*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 15 வது வட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.*

*15 வது வட்டம், மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் சுமார் 570 மாணவ மாணவிகள் பயலுகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.*

*வட்டச் செயலாளர் கே.அங்குசாமி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பரிட்சை அட்டை, பென்சில், பேனா மற்றும் பிஸ்கட் உள்ளிட்டவற்றை வழங்கினார்.*

*முன்னதாக பள்ளி மாணவ-மாணவிகள் மத்தியில் முதலமைச்சரின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி குழந்தைகளுக்கு பரிமாறப்பட்டது.*

*மேலும் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி கே. செல்வன் வட்டக் கழக நிர்வாகிகள் பி.டி.ரவிச்சந்திரன், வசீம் முகமது, தங்கராஜ், இ.எம்.மனோகரன், பக்தவச்சலம், ஜேசுராஜ் 16 வது வட்டம், எலந்தனூர் சிவப்பிரகாஷ், காமராஜ் புரம் கிருபாகரன், ரிஷி மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆசிரியர் பெருமக்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபால கிருஷ்ணன் செய்திருந்தார்.*

### தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

## மாவட்ட துணைச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு!

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஏ. சோபியா அவர்கள்மீது தலைமைக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்ட காரணத்தால்; தூத்துக்குடி தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (மகளிர்) பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, மார்ச் 11 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (மகளிர்) பொறுப்புக்கு திருமதி ஜே.ஜெபதங்கம் பிரேமா அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**தூத்துக்குடி தெற்கு மாவட்டம்**, **மாவட்ட துணைச் செயலாளராக,**

திருமதி. **ஜே. ஜெபதங்கம் பிரேமா**,

*எண். 3, மெயின் ரோடு, சுப்பிரமணியபுரம், சாயர்புரம்,*

*தூத்துக்குடி 628 251 அவர்கள்* தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 18.
நாள் : 11-3- 2024.

# பாசிச பா.ஜ.க. வீழட்டும்...பாதுகாப்பான ‘இந்தியா’ பிறக்கட்டும்.. 9

**வ**லிமையான பிரதமர் என்று மோடியின் மீது பா.ஜ.க. கட்டியெழுப்பிய போலி பிம்பம் சுக்கு நூறாக உடைந்து போய்விட்டது. பா.ஜ.க. வின் ஆட்சியில் குறிப்பாக, மோடியின் இந்த 10 ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு என்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாகி உள்ளது.

**போலி தேசபக்தியை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டிய பா.ஜ.க. உண்மையிலேயே தேச பக்தியோடு இந்தியாவை காக்கும் முயற்சியில் வெற்றி பெற்றதா எனில் இல்லை என்பதே உண்மை. இந்த சூழலில், பாசிச பா.ஜ.க. வின் இந்த 10 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு எங்கெல்லாம் சிக்கலாகி உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கு நினைவு படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.**

2014 - ல் மோடி பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டபோது, பா.ஜ.க. வினர் வைத்த வாதம் நினைவிருக்கிறதா?. ஏன் மோடியே ஒரு பரப்புரைக் கூட்டத்தில் பேசும்போது, அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்கை மறைமுகமாக குறிப்பிட்டு, டெல்லி வலிமையாக இருந்தால்தான் எல்லை வலிமையாக இருக்கும் என்றுபேசினார். மோடியின்ஆதரவாளர்களோ மோடி ஆட்சிக்கு வந்தால் அண்டை நாடுகள் எல்லாம் மோடியைக் கண்டு அஞ்சி நடுங்கும் என்று ஆனந்தக் கூச்சலிட்டனர்.

ஆனால், மோடியின் ஆட்சியில் தேசத்திற்கு வெளியில் இருந்து வரும் ஆக்கிரமிப்புகளும் அதிகரித்துவிட்டன. தேசத்திற்கு உள்ளேயும் அமைதி சீர்குலைந்து போய்விட்டது.



இந்திய எல்லைக்குள் ஊடுருவி சீனா கட்டியுள்ள வீடுகள்

சீனா இந்திய எல்லைக்குள் ஊடுருவி ஒரு சிறு கிராமத்தையே அமைத்துவிட்டது. சர்வதேச நாடுகள் ஆதாரங்களுடன் புகைப்படத்துடன் அது குறித்து செய்தி வெளியிட்டன. இந்தியாவில் எதிர்க்கட்சிகள் மோடி இது குறித்து பதில் சொல்ல வேண்டும் என்று வலியுறுத்தின. ஆனால், அஞ்சா நெஞ்சர் என்று பா.ஜ.க. வினரால் புகழ்பாடப்படும் மோடியோ, சீனா என்ற வார்த்தையை உச்சரிக்கவே தயங்கினார். தயங்குகிறார். நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதிக்க மறுத்தார். எதிர்க்கட்சிகள் சீன ஆக்கிரமிப்பு குறித்து எழுப்பிய எந்தக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல அஞ்சி ஓடினார்.

இந்திய ராணுவ வீரர் அபிநந்தனை பாகிஸ்தான் பிடித்து வைத்தபோது, தேசமே துடித்துப்போனது. அதைக்கூட தங்கள் வாக்கரசியலுக்கு பயன்படுத்த பா.ஜ.க. முயற்சி எடுத்தபோது, பா.ஜ.க.வின்போலி தேச பக்தி முகத்திரை கிழிந்து தொங்கத் தொடங்கியது.



இந்திய ராணுவ வீரர் அபிநந்தனை பாகிஸ்தான் ராணுவம் பிடித்து வைத்தபோது எடுத்த படம்

இங்கே மோடி அரசின் ஊழல்களை, நிர்வாகச் சீர்கேடுகளை, மக்கள் விரோதச் சட்டங்களைக் குறித்து கேள்வி எழுப்பியோரை தேச விரோதிகள் என்று முத்திரை குத்துவது பா.ஜ.க. வின் வழக்கம். ஆனால், மோடி பிரதமரான பின் 2015 -ம் ஆண்டு இறுதியில் ரஷ்யாவிற்குச் சென்று விட்டு ஆப்கன் வந்தவர் திடீரென்று எந்த முன்னறிவிப்பும் இன்றி பாகிஸ்தான் சென்றார்.

பிரதமரின் சிறப்பு IAF போயிங் 737 விமானம் பாகிஸ்தானில் இறங்கிய பிறகுதான் இந்திய நாட்டு மக்களுக்கும் ஊடகங்களுக்குமே பிரதமர் பாகிஸ்தான் சென்றது தெரியவந்தது.

அங்கு அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பை சந்தித்து அவருக்கு பிறந்த நாள் வாழ்த்துகளையும் கூறியதோடு அவர் அளித்த விருந்தையும் உண்டு களித்தார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் 10 ஆண்டு கால ஆட்சியில் பாகிஸ்தானுக்கு இந்தியப் பிரதமர் யாரும் சென்றிடாத நிலையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பதவியேற்றதும் பாகிஸ்தான் சென்றவர் மோடி.

ஒரு வேளை மன்மோகன் சிங்கோ அல்லது பா.ஜ.க. அல்லாத வேறு பிரதமர்களோடு இப்படி முன்னறிவிப்பின்றி பாகிஸ்தான் சென்று அங்கே விருந்துண்டு வந்திருந்தால் பா.ஜ.க. அவர்களுக்கு என்ன முத்திரை குத்தியிருக்கும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.



2015 ம் ஆண்டு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பை சந்தித்த பிரதமர் மோடி

சீன அதிபரை இந்தியாவிற்கு அழைத்து வந்து, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து மகாபலிபுரத்தில் அவரோடு ஊஞ்சல் ஆடிய மோடியால் சீனாவின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக கண்டனக் குரல் எழுப்ப இயலவில்லை எனில்,


**தமிழ்க்கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்




மோடியின் ஆட்சியில் இந்தியா எவ்வளவு பலவீனமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பா.ஜ.க. ஆட்சியில் இருந்தபோதுதான், நாடாளுமன்றத்திற்குள் நுழைய தீவிரவாதிகள் முயற்சி செய்தனர் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. நாடாளுமன்றத் தாக்குதல் நடைபெற்ற அதே டிசம்பர் 13 -ம் தேதி, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்குள் புகுந்த மர்ம நபர்கள் மக்களவை நடைபெறும் அரங்கிற்குள்ளேயே புகை குண்டுகளுடன் சென்றது மட்டுமின்றி, நாடாளுமன்றத்தில் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, புகை குண்டுகளை அவைக்குள் வீசிய போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த தேசமும் அதிர்ந்து போனது.



நாடாளுமன்றத்தில் வண்ணப்புகைக் குண்டுவீச்சு தாக்குதல்

நாடாளுமன்றத்தையே காப்பாற்ற திராணியற்ற மோடியா நாட்டைக் காக்கப் போகிறார் என்று நாட்டு மக்கள் விழித்துக் கொண்டனர். அப்போதும் கூட நாடாளுமன்றத்திற்குள் புகுந்து, நடைபெற்ற தாக்குதல் குறித்து ஒரு வார்த்தை கூட மக்களவையில் பேச மறுத்தார் மோடி. மோடியின் ஆட்சியில் இந்தியா பாதுகாப்பற்ற சூழலில் இருக்கிறது என்பதற்கான ஆகப் பெரும் சான்று, புல்வாமா தாக்குதல்.

2019 -ம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி 78 பேருந்துகளில் மொத்தம் 2,547 சி.ஆர்.பி.எப் வீரர்கள் ஸ்ரீநகரிலிருந்து ஸ்ரீநகர் ஜம்மு தேசிய நெடுஞ்சாலை வழியாக ஜம்மு காஷ்மீர் சென்று கொண்டிருந்தனர். ஜம்முவிலிருந்து கிளம்பிச் செல்லும் வழியில் லெத்திபோரா மற்றும் அவந்திபோரா பகுதிகளுக்கருகே சிறிய வாகனம் ஒன்று படையினரின் பேருந்து ஒன்றில் மோதி வெடித்தது.

இந்தச் சிற்றுந்தில் சுமார் 350 கிலோ வெடி மருந்து இருந்திருக்கலாம் என்பது பின்னர் விசாரணையில் தெரியவந்தது. இந்தத் தாக்குதலில் 76 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த நாற்பதிற்கும் மேற்பட்ட காவல்படையினர் கொல்லப் பட்டனர்.



புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் உடல்கள்

**இந்த தாக்குதல் குறித்து ஊடகங்களிடம் பேசிய அம்மாநில ஆளுநர் சத்யபால் மாலிக், இது குறித்து பிரதமர் மோடியின் மீது கடும் விமர்சனங்களை முன் வைத்தார். குறிப்பாக, தாக்குதல் குறித்து மோடியிடம் தெரிவித்தபோது, அவர் அது குறித்து எதுவும் பேச வேண்டாம் என்று தனக்கு அறிவுறுத்தியதாக குற்றம் சாட்டினார்.**

**2500 க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படை வீரர்களை சாலை வழியாக நீண்ட தூரம் இடம்பெயரச் செய்வது அவர்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடும் என்று தாம் முன்பே எச்சரித்ததாகவும், வான் வழியே அவர்களை அழைத்துச் செல்லலாம் என்று தான் அறிவுறுத்தியதாகவும் ஆனால், ஒன்றிய மோடி அரசு அதற்கு செவிசாய்க்காமல் போனதே நம் பாதுகாப்புப் படை வீரர்கள் 40 க்கும் மேற்பட்டோரை நாம் இழப்பதற்கு காரணம் என்று அப்போது ஆளுநராக இருந்த சத்யபால் மாலிக் சொன்ன குற்றச் சாட்டுகளை கேட்டபோது, மோடியின் ஆட்சியில் பாதுகாப்புப் படை வீரர்களுக்கே பாதுகாப்பு இல்லையா என்ற கேள்வி தேசம் முழுவதும் எழத் தொடங்கியது.**

வழக்கம் போல் மோடியின் தவறுகளைச் சுட்டிக் காட்டியதற்காக, அவர் மீது விமர்சனம் வைத்ததற்காக சத்யபால் மாலிக் வீட்டில் சி.பி.ஐ. சோதனை நடத்தப்பட்டது. மோடியை நோக்கி யாரெல்லாம் கேள்வி எழுப்புகிறார்


**போ**லி தேசபக்தியை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டிய பா.ஜ.க. உண்மையிலேயே தேசபக்தியோடு இந்தியாவை காக்கும் முயற்சியில் வெற்றி பெற்றதா எனில் இல்லை என்பதே உண்மை. இந்த சூழலில், பாசிச பா.ஜ.க. வின் இந்த 10 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு எங்கெல்லாம் சிக்கலாகி உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

களோ அவர்களுக்கு எதிராக, அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை ஆகியன ஏவப்படும். அதற்கு சத்யாபால் மாலிக்கும் தப்பவில்லை.

பாதுகாப்பு வீரர்களின் மீதான தாக்குதல் என்பது திடீரென்று நடைபெற்ற ஒன்றல்ல. மோடி ஆட்சிக்கு வந்தது முதலே இதுபோல் ஏராளமான சம்பவங்கள் நடைபெற்றன.

2014 -ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று மோடி பிரதமரானார். 2015 ஆம் ஆண்டில் இருந்தே இந்தியப் பாதுகாப்புப் படையின் மீது பாகிஸ்தான் ஆதரவு ஆயுதக் குழுக்களின் தற்கொலைத் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. 2015 ஜூலை மாதத்தில் துப்பாக்கி ஏந்திய மூவர் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பேருந்து மற்றும் காவல் நிலையத்தைத் தாக்கினர்.

2016 ஜனவரியில் துப்பாக்கியுடன் பதான்கோட் வான் படை நிலையத்தில் தாக்குதல் நடந்தது.



பதான்கோட் வான் படை நிலைய தாக்குதல்

2016 பிப்ரவரி மற்றும் ஜூன் காலகட்டத்தில் எட்டு இராணுவத்தினர் பொம்பொரி தாக்குதலில் உயிரிழந்தனர். 2016 செப்டம்பரில் இந்திய இராணுவப் பட்டாளத் தலைமையகத்தில் நிகழ்ந்த யூரி தாக்குதலில் 19 வீரர்கள் கொல்லப் பட்டனர். 2017 டிசம்பர் 31 இல் லெத்திபோரா கமொண்டோ பயிற்சி நிலையத்தில் நடந்த தாக்குதலில் ஐந்து பாதுகாப்பு அதிகாரிகள் உயிரிழந்தனர்.

**இப்படி தொடர்ச்சியாக மோடி ஆட்சிக்கு வந்தது முதலே நம் பாதுகாப்பு வீரர்களை நாம் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறோம். வெளிநாட்டில் இருந்து நடைபெறும் தாக்குதல்கள் ஒருபுறம் இருக்க, உள்நாட்டிலும் மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்கள் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.**



மணிப்பூர் கலவரத்தின்போது பெண்கள் நிர்வாணமாக அழைத்து செல்லப்பட்டனர்

**மணிப்பூரில் பெண்கள் கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதைப் பற்றி மோடியை நாடாளுமன்றத்தில் பேச வைக்க எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர வேண்டிய நிலை இருந்தது. அப்போதும் கூட மணிப்பூரைப் பற்றியே பேசாமல், எதிர்க்கட்சிகள் பொறுமை இழந்து வெளி நடப்பு செய்த பிறகு மணிப்பூர் குறித்து பூசி மெழுகினார் மோடி.**

**மணிப்பூரில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் கணவர் ராணுவ வீரர். இந்த நாட்டை எதிரிகளிடம் இருந்து காக்கும் பணியில் ஈடுபட்ட தன்னால் மதவெறியர்களிடம் இருந்து தன் மனைவியை மோடியின் ஆட்சியில் காக்க முடியவில்லை என்று கண்ணீர் சிந்தினார்.**

**மல்யுத்த வீராங்கனைகள் பா.ஜ.க. எம்பியிடம் இருந்து தங்களின் கண்ணியத்தை காத்துக் கொள்ள முடியவில்லை என்று கண்ணீர் சிந்துகின்றனர். விவசாயிகள் தங்களை பா.ஜ.க. வின் ஈவு இரக்கமற்ற காவல்துறையிடம் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்று கண்ணீர் சிந்துகின்றனர்.**

**தொழிலதிபர்கள் பா.ஜ.க. அமலாக்கத்துறையைக் காட்டி மிரட்டுவதாக கண்ணீர் சிந்துகின்றனர். இளைஞர்கள் வேலை இல்லா திண்டாட்டத்தால் தங்கள் எதிர்காலம் வீணாவதாக கண்ணீர் சிந்துகின்றனர்.**

**தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், இசுலாமியர்கள், கிறிஸ்தவர்கள் பா.ஜ.க. வின் மதவாத உயர்சாதியினருக்கான ஆரியவாத அரசியலால் தங்கள் சுயமரியாதையும் வாழ்வாதாரமும், வழிபாட்டு உரிமைகளும் பறிபோவதாக கண்ணீர் சிந்துகின்றனர்.**




விவசாயிகள் போராட்டத்தில் கண்ணீர் புகைக் குண்டு தாக்குதல்

**தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இலங்கை ராணுவத்தால், தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதும், துப்பாக்கிச் சூட்டில் பலியாவதும் மோடியால் தடுக்கப்படவில்லை என்று மீனவர்கள் கண்ணீர் சிந்துகின்றனர். முட்டை மதிப்பெண் எடுத்தாலும் பரவாயில்லை பணம் இருந்தால் மருத்துவர் ஆகலாம். நல்ல மதிப்பெண்ணே இருந்தாலும் பணம் இல்லாவிட்டால் மருத்துவர் ஆக முடியாது என்று கொண்டு வரப்பட்ட தகுதியற்ற ‘நீட்’ தேர்வால் தங்கள் கனவுகள் கருகிப் போவதாகமாணவக் கண்மணிகள் கண்ணீர் சிந்துகின்றனர்.**

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மோடியின் நிர்வாகத் திறமையில்லா ஆட்சியில் பா.ஜ.க. வின் சொத்து மதிப்பும், மோடியின் நண்பர்கள் சிலரின் சொத்து மதிப்புமே உயர்ந்திருக்கிறது. அவர்கள் மட்டுமே பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாறாக, சாமானியர்கள் முதல், ராணுவ வீரர்கள் வரை யார் ஒருவருக்கும் மோடியின் ஆட்சியில் இந்தியாவில் பாதுகாப்பு இல்லை என்பதே கசப்பான உண்மை.

**நாம் இந்த தேர்தலில் இந்த துயரங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். பாசிச பா.ஜ.க. வை வீழ்த்துவோம்.. புதிய வலிமையான பாதுகாப்பான இந்திய தேசத்தை உருவாக்குவோம்.**

(தொடரும்...)

## தருமபுரி – கிருஷ்ணகிரி – சேலம் மாவட்டங்களில்

# ரூ.560.23 கோடி மதிப்பிலான புதிய மற்றும் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்து 8736 பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்

தருமபுரி, மார்ச் 13 -

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2024 அன்று தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் 350 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 993 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 114 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 75 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பல்வேறு துறைகளின் சார்பில் 8,736 பயனாளிகளுக்கு 95 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அரசு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு சேலம் மற்றும் தருமபுரியில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

முதலமைச்சர் அவர்கள் தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக காலை சென்னையிலிருந்து விமானம் மூலமாக சேலம் வந்தடைந்தார். சேலம் விமான நிலையத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் சேலத்திலிருந்து முதலமைச்சர் அவர்கள் விழா நடைபெறும் தருமபுரிக்கு சாலை மார்க்கமாக சென்றார். சேலத்திலிருந்து தருமபுரி வரை வழிநெடுகிலும் முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் முதலமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் தருமபுரி கலைக் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில்:

**தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், ரூ.30 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் நல்லம்பள்ளி வட்டம், பாளையம் கிராமத்தில் வருவாய் அலுவலர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், ரூ.72 கோடியே 10 இலட்சத்து 67 ஆயிரம் செலவில் சாலைகள் மேம்படுத்தும் பணிகள், அங்கன்வாடி மையங்கள், பால் கூட்டுறவு சங்கக் கட்டடம், நியாய விலைக் கட்டடம், சமுதாய கரிம எரிவாயு கலன், கிராம ஊராட்சி செயல் கட்டடங்கள், பேருந்து நிலையம், தானிய கிடங்குகள்;

நீர் வளத்துறை சார்பில், ரூ.1 கோடியே 20 இலட்சம் செலவில் பஞ்சப்பள்ளி மற்றும் பென்னாகரத்தில் பிரிவு அலுவலகக் கட்டடங்கள், அரூர் வட்டம், பொதுப்பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம்;

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், ரூ.98 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் அதியமான் கோட்டையிலுள்ள அதியமான் கோட்டம் புனரமைக்கும் பணி;

பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.2 கோடியே 20 இலட்சத்து 33 ஆயிரம் செலவில் இந்திரா நகர் இருளர் கிராமத்தில் சிமெண்ட் கான்கிரீட் சாலை, கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, வாழைத்தோட்டம் பழங்குடியினர் குடியிருப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, அண்ணா நகர் இருளர் காலனியில் ஆழ்துளைக் கிணறுடன் கூடிய தண்ணீர் வசதி, கழிவுநீர் கால்வாயுடன் சிமெண்ட் சாலை, கத்திப்பட்டி, சின்னமஞ்சவாடி பழங்குடியினர் குடியிருப்பு, நடுப்பட்டி கிராமம், வத்தல்மலைபால்சிலம்பு பழங்குடியினர் குடியிருப்பு ஆகிய இடங்களில் தண்ணீர் வசதி, கத்திரிப்பட்டி கிராமத்தில் மயானத்திற்கு எரிமேடை, சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் சாலை, சிட்லிங் கிராமத்தில் புதிய நூலகக் கட்டடம், மயானத்திற்கு எரிமேடை, சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் சாலை, கல்நாடு, சித்தேரி, மூலேரிக்காடு, நாகமரத்துப் பள்ளம் பழங்குடியினர் குடியிருப்பு, எம்.ஜி.ஆர். நகர் பழங்குடியினர் குடியிருப்பு, மாரியம்மன் கோவிலூர் கிராம பழங்குடியினர் குடியிருப்பு, பெரியப்பட்டி பழங்குடியினர் குடியிருப்பு, இராஜாவூர் பழங்குடியினர் குடியிருப்பு ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலைகள், நடுப்பட்டி பழங்குடியினர் கிராமத்தில் பல்நோக்கு கட்டடம், எலந்தகொட்டப்பட்டி உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர், எலந்தகொட்டப்பட்டி பழங்குடியினர் குடியிருப்பில் தடுப்புச்சுவர்;

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் முக்குளம், போடூர், கொண்டகரஹள்ளி ஆகிய திட்டப் பகுதிகளில் 70 கோடியே 78 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் அடுக்குமாடி குடியிருப்புகள்;

உயர்கல்வித் துறை சார்பில் 4 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் பூமாண்டஹள்ளி அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரியில் பணிமனை கட்டடம், பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 ஆய்வகக் கட்டடங்கள், தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் 4 வகுப்பறைக் கட்டடம்;

**என மொத்தம் தருமபுரி மாவட்டத்தில் 151 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் 879 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2024) தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 8,736 பயனாளிகளுக்கு 95 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில், உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடிப்பு திறனை மேம்படுத்த மானிய விலையில் பரிசல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் செ.செந்தில்குமார், ஏ.செல்லக்குமார், எஸ்.ஆர்.பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, எஸ்.பி.வெங்கடேஸ்வரன், ஒய்.பிரகாஷ், டி.மதியழகன், பி.ராமச்சந்திரன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கி. சாந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இரா. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 14 கோடியே 88 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உயர் மட்ட பாலங்கள், இணைப்பு நூலகக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், நியாய விலைக்கடை கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாப்பிரெட்டிப்பட்டி அரசினர் மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் மற்றும் அரூர் அரசினர் மருத்துவமனையில் கூடுதல் கட்டடம்;

வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பென்னாகரத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 58 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பென்னாகரத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம்;

பள்ளிக்கல்வித் துறை சார்பில் 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அ.மல்லாபுரம் மற்றும் காரிமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள உண்டு உறைவிடப் பள்ளிகளில் புதிய மேம்படுத்தப்பட்ட பள்ளிக் கட்டடங்கள்;

உயர்கல்வித் துறை சார்பில் 4 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரியில் வெப்ப பொறியியல் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப ஆய்வுக்கூடம் மற்றும் பணிமனை கட்டடம்;

பேரூராட்சிகள் துறை சார்பில் 3 கோடியே 44 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் காரிமங்கலம் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் கழிப்பறை, குடிநீர் வசதி மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் பாப்பாரப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம்;

**என மொத்தம் தருமபுரி மாவட்டத்தில் 37 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 51 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**தருமபுரி மாவட்ட பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விவரம்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இலவச வீட்டுமனைப்பட்டா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்கடன்கள், பயிர்க்கடன்கள் மற்றும் கால்நடைப் பராமரிப்புக் கடன்கள், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பராமரிப்பு உதவித் தொகை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மகளிர் திட்டம்) சார்பில் வங்கிக் கடன் இணைப்பு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் எருமை கன்று வளர்ப்புத் திட்டம் மற்றும் நாட்டுக் கோழிப்பண்ணை அமைக்கும் திட்டத்தில் நிதியுதவி, உள்நாட்டு மீனவர்களுககு மானிய விலையில் பரிசல் வழங்கும் திட்டத்தில் நிதியுதவி;

சமூக பாதுகாப்புத் துறை சார்பில் நிதி ஆதரவு திட்டத்தில் கல்வி உதவித் தொகை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தில் நிதியுதவி, வன உரிமைச் சட்டத்தின் கீழ் தனி நபர் உரிமை வழங்குதல், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல், வேளாண்மை துறை சார்பில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம், அத்மா திட்டம், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், சுழல் கலப்பை, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த பண்ணையம், விசை களை கருவி, விதை உற்பத்தி மானியம் ஆகிய திட்டங்களில் நிதியுதவி;

தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில், சொட்டு நீர் பாசன உபகரணங்கள் வழங்குதல், சிப்பம் கட்டும் அறை மற்றும் வெங்காயம் சேமிப்பு கிடங்கு அமைத்திட உதவிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், விவசாயிகளுக்கான வேளாண் இயந்திரங்கள் வழங்குதல், வேளாண்மை பொறியியல் துறை சார்பில், போர்வெல் மற்றும் விவசாயக் கருவிகள் வழங்குதல், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை -வாரியங்கள் சார்பில், பணியிடத்து விபத்து மரணம், இயற்கை மரணம், திருமணம், ஓய்வூதிய நலத்திட்டம் ஆகிய திட்டங்களில் நிதியுதவி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கடனுதவிகள் வழங்குதல்;

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் முக்குளம் மற்றும் போடூர் அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்குதல், பள்ளிக் கல்வித் துறை சார்பில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இட்டு வைப்பு செய்யும் திட்டம், முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் கல்வி உதவித் தொகை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் நிதியுதவி;

**என மொத்தம் தருமபுரி மாவட்டத்தில் 3856 பயனாளிகளுக்கு 55 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 18 கோடியே 38 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், மேல்கொட்டாய் கிராம துவக்கப் பள்ளி, கீழ்ப்பூங்குருதி கிராம நடுநிலைப் பள்ளி மற்றும் நல்லசந்திரம் கிராம துவக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளில் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் முடிவுற்ற 29 சாலை மேம்பாட்டுப் பணிகள்;

பொதுப்பணித்துறை சார்பில் 8 கோடியே 50 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரியில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகம், டி. பேலாளம் மற்றும் கொடகரை ஆகிய இடங்களில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்;

நீர்வளத்துறை சார்பில் 21 இலட்சம் ரூபாய் செலவில் சூளகிரி வட்டம், பாசனப் பிரிவு அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம்;

உயர்கல்வித் துறை சார்பில் 4 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலை கல்லூரியில் ஒன்பது ஆய்வுக் கட்டடம் மற்றும் இரண்டு கழிவறை தொகுதி;

வனத்துறை சார்பில் ரூ.35 இலட்சம் தளியில் மரகதபூஞ்சோலை, குந்துகோட்டையில் பழங்குடியினர் உணவகம் மற்றும் சூழல் அங்காடி;

காவல் துறை சார்பில் 2 கோடியே 55 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் ஒசூர் உட்கோட்டத்தில் நல்லூர் காவல் நிலையம்;

**என மொத்தம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 34 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் 41 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 14 கோடியே 31 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தேன்கனிக்கோட்டை தளி சாலையில் கல்கெரி (வழி) சீர்திம்மனட்டி வரை உள்ள சாலையில் உயர்மட்ட பாலம், ஒசூர்தேன்கனிக்கோட்டை சாலையில் அலேநத்தம் சாலை முதல் அடவிசாமிபுரம் உள்ள சாலையில் உயர்மட்ட பாலம், கல்லாறு ஆறு முதல் விசுவாசம்பட்டி வரை உள்ள சாலையில் உயர்மட்ட பாலம், கேத்துநாயக்கன்பட்டி கிராமத்திலுள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிய வீடுகள் கட்டும் பணி;

நீர்வளத் துறை சார்பில் 3 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கெலவரப்பள்ளி அணையில் அணை பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு திட்டத்தில் பூங்கா புனரமைக்கும் பணி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் 50 படுக்கையுடன் கூடிய சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி;

பொதுப்பணித் துறை சார்பில் 2 கோடியே 68 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கழிவறைகள், கெலமங்கலத்தில் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாவில் பள்ளிக் கட்டடம் கட்டும் பணி;

உயர்கல்வித் துறை சார்பில் 10 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி மற்றும் கிருஷ்ணகிரி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறை தொகுதி, பணிமனைக் கட்டடம் கட்டும் பணி;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 13 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மண் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றும் பணிகள், தார் சாலைகளை சீரமைக்கும் பணிகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை சீரமைக்கும் பணிகள்;

**என மொத்தம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 64 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**கிருஷ்ணகிரி மாவட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விவரம்**

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கல் மற்றும் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் பிரதம மந்திரி ஜன்மான் திட்டத்தில் உதவிகள், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாட்டுக் கோழிப்பண்ணை அலகுகள் நிறுவிட நிதியுதவி, சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை சார்பில் இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் உதவிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள் மற்றும் சலவை பெட்டிகள் வழங்குதல், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், வருவாய்த் துறை சார்பில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குதல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தொழில் முனைவோர் கடன் திட்டத்தில் நிதியுதவி, மகளிர் திட்டத்தில் வங்கிக் கடன் இணைப்புகள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் விவசாயக் கடன், சமூக பாதுகாப்பு துறை சார்பில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பிற்கான நிதியுதவி;

**என மொத்தம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2206 பயனாளிகளுக்கு 21 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

**சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைத்தல்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.43 கோடியே 65 இலட்சம் செலவில் மேட்டூர் மாவட்ட ஒருங்கிணைந்த ஆய்வகக் கூடம், கல்பாரப்பட்டி மற்றும் பி. நாட்டாமங்கலத்தில் துணை சுகாதார நிலையங்கள், ஈ.காட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடம் மற்றும் அம்மாபேட்டை அரசு புறநகர் மருத்துவமனைக் கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வாழப்பாடி மற்றும் மேச்சேரியில் புதிய உழவர் சந்தைகள்;

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் ரூ.69 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் சேலத்தாம்பட்டியில் 496 அடுக்குமாடி குடியிருப்புகள்;

கூட்டுறவுத் துறை சார்பில் ரூ. 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் விவசாய சேமிப்பு கிடங்குகள், வணிக வளாகங்கள், உணவு தானிய சேமிப்பு கிடங்கு, வேளாண் சேவை மைய நிழற்கூடம், உலர் களம், தானிய சேமிப்பு கிடங்குகள், கிராமப்புற அங்காடி நவீனமயமாக்குதல் மற்றும் சுற்றுச்சுவர், நவீனமயமாக்கப்பட்ட கிராமப்புற அங்காடி;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 67 கோடியே 89 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில், நூலகக் கட்டடம், கூட்டுறவு சங்க கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், பேருந்து நிழற்கூடம், ஊராட்சி செயலர் அலுவலகக் கட்டடங்கள், சமத்துவ மயானத்திற்கு காத்திருப்போர் கூடம், பள்ளிக் கட்டடங்கள், நியாய விலைக் கடைக்கான கட்டடங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கக் கட்டடம், பாலங்கள், முடிவுற்ற சாலை மேம்பாட்டுப் பணிகள்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் சீலநாயக்கன்பட்டி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பொருள் மீட்பு வசதி மையம், ஜீவா நகர், குப்தா நகர் மற்றும் ராஜேந்திர சத்திரம் ஆகிய இடங்களில் சுகாதார அலுவலர் அலுவலகக் கட்டடங்கள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 30 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் செம்மாண்டப்பட்டியில் புதிய வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம்;

நீர்வளத்துறை சார்பில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கெங்கவல்லி கிராமத்தில் கனவாய்க்காடு, சுவேதா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

**என மொத்தம் சேலம் மாவட்டத்தில் 164 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் 73 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உமையாள்புரம் நூலகக் கட்டடம் மற்றும் சேலம் மாவட்டத்தில் நகர்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிக்கு சாலைகள் மேம்படுத்தும் பணி;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குமரகிரி ஏரி பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கோட்டை மலேரியா அலுவலகம் அருகில் கூடுதல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணி;

கூட்டுறவுத் துறை சார்பில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செக்கடிப்பட்டி மற்றும் கடம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் அக்ரி மார்ட்டுகள் அமைக்கும் பணி;

நீர்வளத் துறை சார்பில் 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலைவாசல் வட்டம், இலுத்துவாடி கிராமத்தில் இலத்துவாடி ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி;

**என மொத்தம் சேலம் மாவட்டத்தில் 12 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**சேலம் மாவட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விவரம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் பெருங்கடன் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு கடன்கள் வழங்குதல், கூட்டுறவுத் துறை சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல், சமூக பாதுகாப்பு துறை சார்பில் மிஷன் வாத்சல்யா நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் நிதியுதவி;

என மொத்தம் சேலம் மாவட்டத்தில் 2674 பயனாளிகளுக்கு

18 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்ட பயனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

முன்னதாக சேலத்திலிருந்து காணொலி வாயிலாக கலந்து கொண்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மா. சுப்பிரமணியன் , சேலம் அம்மாபேட்டை அரசு புறநகர் மருத்துவ மனையில் ரூபாய் 42 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டடம், மேட்டூர் பகுதியில் ஒருங்கிணைந்த ஆய்வுக்கூடம், கல்பாரப்பட்டி, பி. நாட்டார் மங்கலம், ஈ.காட்டூர் ஆகிய பகுதிகளில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள துணைச் சுகாதார மையங்கள், என சேலம் மாவட்டத்தில் மொத்தம் ரூபாய் 43 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறை கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்ததற்காகவும், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் 50 படுக்கை வசதிகளுடன் கூடிய சிகிச்சை மையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியதற்காகவும், தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் அரூர் அரசினர் மருத்துவமனைகளில் தலா 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியதற்காகவும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் செ.செந்தில்குமார், ஏ. செல்லக்குமார், எஸ்.ஆர்.பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே. மணி, எஸ்.பி. வெங்கடேஸ்வரன், ஒய். பிரகாஷ், டி. மதியழகன், பி. ராமச்சந்திரன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி, முன்னாள் அமைச்சர் பழனியப்பன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தடங்கம் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இரா. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில்

ரூ.416.69 கோடி மதிப்பிலான
புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டுதல்,

ரூ. 509.95 கோடி மதிப்பில்
நிறைவுற்ற திட்ட பணிகள் திறந்து வைத்தல்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

பங்கேற்று நலத்திட்டங்கள் வழங்குகிறார்

இடம் : பொள்ளாச்சி ஆச்சிப்பட்டி, நாள்: 13.3.2024

அனைவரும் அலைகடலென வாரீர்... வாரீர்... வாரீர்...

மாண்புமிகு அமைச்சர்

**சு.முத்துசாமி** அவர்கள்,

வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை

**நா.கார்த்திக்,** Ex.MLA.,
கோவை மாநகர் மாவட்டச் செயலாளர்

**தளபதி முருகேசன்,**
கோவை தெற்கு மாவட்டச் செயலாளர்

**தொ.அ.ரவி,**
கோவை வடக்கு மாவட்டச் செயலாளர்

**ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக**




**மு.பெ.சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

**கயல்விழி செல்வராஜ்**
ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்
தி.மு.கழக மகளிர் அணி துணைச் செயலாளர்

**இல.பத்மநாபன்**
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர்
தலைவர், 4வது மண்டலம் – திருப்பூர் மாநகராட்சி



கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளையொட்டி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முகாம் அலுவலகம் மற்றும் ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தி லும் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் பேராசிரியர் திருவுருவப்படத்திற்கு கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள் கே.குமார்முருகேஷ், ஆ.செந்தில்குமார், பொன்னுச்சாமி, ராஜ், மாநகர நிர்வாகிகள் விமல் (எ) நந்தகுமார் கே.சந்திரசேகர், பாத்திமா, பகுதி செயலாளர்கள் வெ.செல்வராஜ், அக்னிசந்துரு (எ)சந்திரசேகர், பொ.ராமச்சந்திரன், கீதா கதிர்வேல், கனிமொழி, இளையகோபால், சி.ஏ,கார்த்திக், சரவணன், கோபால், ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பட்டு வளர்ச்சி துறை மூலமாக 2 இளம் புழு வளர்ப்பு மையம்!

# ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம்! 3 பேருக்கு ரூ.1.81 கோடி மானியம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 13 -

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேற்று முன்தினம் (11.3.2024) தலைமைச் செயலகத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டு வளர்ச்சி துறையின் மூலமாக 2 இளம் புழு வளர்ப்பு மையம், ஒரு பட்டுப் புழு விதை உற்பத்திமையம் அமைக்க 3 பயனாளர்களுக்கு ரூ. 1.81கோடி மானியம் வழங்கினார்கள்.

தமிழ்நாடு பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டுவரும் அரசு பட்டுமுட்டை உற்பத்தி நிலையத்தின் மூலமாக தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டை உற்பத்தி செய்யப்பட்டு, பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் பட்டு முட்டைத் தேவையினை கருத்தில் கொண்டும், தரமான பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு தடையின்றி வழங்கிடவும், தனியார் தொழில் முனைவோரை பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையிலும், 2023 - 24 ஆம் ஆண்டின் பட்டுவளர்ச்சித் துறைக்கான அறிவிப்பில் "தனியார் தொழில்முனைவோர் மூலம் ரூபாய் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் (வித்தகம்) நிறுவப்படும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தரமான பட்டுமுட்டைகள் உற்பத்தி செய்து பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கிடும் நோக்கத்தில் திருப்பூர் மாவட்டம் மானுப்பட்டியில் ரூ.2.16 கோடி மதிப்பில் 30 இலட்சம் பட்டுமுட்டைகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பட்டுமுட்டை உற்பத்தி மையம் அமைத்த திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி பா. அகல்யா பெண் தொழில் முனைவோருக்கு உதவித்தொகையாக ரூ.1கோடியே 62 இலட்சம் ரூபாய் உதவித்தொகை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

பட்டு முட்டை பொரித்தது முதல். இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழு வளர்ப்பில், தரமான மல்பெரி இலைகளை உணவளிப்பதிலும், சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்பவெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும், சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. இளம் பட்டுப்புழுக்களைப் பெற்று பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற முடிகிறது. ஆகவே, இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில். 202324 ஆம் ஆண்டின் பட்டுவளர்ச்சித் துறை அறிவிப்பின் ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 2 பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கைத்தறி. கைத்திறன். துணிநூல் மற்றும் கதர் துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் சந்திர சேகர் சாகமுரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ்

# 383 காசநோயாளிகளுக்கு தலா 500 கிராம் சத்துமாவு!

## மேயர் ஆர்.பிரியா வழங்கினார்!

சென்னை,மார்ச் 13 -

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட காசநோயாளிகளின் ட்ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடும் வகையில், காசநோயாளிகளுக்கு தலா 500 கிராம் சத்துமாவு பாக்கெட்டுகளை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று முன்தினம் வழங்கினார்.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடும் வகையில், தன்னார்வலர்கள் பங்களிப்புடன் 383 காசநோயாளிகளுக்கு தலா 500 கிராம் சத்துமாவு பாக்கெட்டுகளை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று முன்தினம் (11.03.2024) தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் 2025ஆம் ஆண்டிற்குள் காசநோயினை ஒழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரமான காசநோய் கண்டறிதல் சேவை மற்றும் சிகிச்சை அளிக்கும் வசதிகள் உள்ளன. இத்திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் பணியாளர்கள் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் தன்னார்வத் தொண்டர்கள் காசநோய் கண்டறியும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

2023ஆம் ஆண்டு 3,70,258 நபர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டு, 11,273 காசநோயாளிகள் மாநகராட்சியின் மூலமாக கண்டறியப்பட்டனர். மேலும், 4,553 காசநோயாளிகள் தனியார் துறையிலும் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்களை காசநோய் தொற்று எளிதில் தாக்கும். மேலும், காசநோய் தொற்று உடையவர்கள் பசியின்மை காரணமாக சரிவர உணவு உட்கொள்ள இயலாது. இதனால், அவர்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. உட்கொள்ளும் மருந்துகளுடன் சத்தான உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டும். இல்லையெனில் காசநோயாளிகளின் இறப்பு விகிதம் அதிகரிக்கக்கூடும்.

ஆகையால் காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட "நிக்ஷய் போஷன் யோஜனா" எனும் திட்டத்தின் கீழ் அவர்களின் சிகிச்சை காலம் முழுவதும் மாதந்தோறும் ரூ.500 அவர்களது வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.


காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட Nikshay Mithra திட்டத்தின் மூலம் தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து நன்கொடை வரவேற்கப்படுகிறது. இது வரை 17 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் 160 தனிநபர்கள் மூலம் 850 காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, ஜி.ஆர்.டி. தங்க மாளிகை நிறுவனத்தின் சார்பில் தன்னார்வ பங்களிப்புடன் வழங்கிய ரூ.5 இலட்சம் நன்கொடையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு காசநோயாளிகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்திட இந்த மாதம் முதல் 383 காசநோயாளிகளுக்கு மாதந்தோறும் தலா 500 கிராம் சத்துமாவு பாக்கெட்டுகள் 6 மாதங்களுக்கு வழங்கப்படும்.

காசநோயாளிகள் மருந்து உட்கொள்ளும் ஆரம்ப காலத்தில் அவர்களால் திடப்பொருட்களை உட்கொள்ள இயலாது. திரவ உணவுப் பொருட்களான சத்துமாவு கஞ்சி பருக ஏதுவாக இருக்கும். இந்தச் சத்துமாவானது, முளை கட்டிய பயறு மற்றும் சிறு தானியங்களினால் தயாரிக்கப்பட்டது. இந்தக் கஞ்சியை தினமும் பருகுவதால், உடலுக்குத் தேவையான சக்தி கிடைப்பதோடு நோய் எதிர்ப்புத் தன்மையும், இரத்த அணுக்களும் அதிகரிக்கும். அவர்களின் உடல் எடையும் அதிகரிக்கும். இறப்பு விகிதமும் குறையும்.

இதுபோன்று, இன்னும் பல தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், தனியார் நிறுவனங்கள் காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட தொடர்ந்து தங்களின் பங்களிப்பை அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அனைவரும் ஒன்றிணைந்து காசநோய் இல்லா சென்னை உருவாக்கப் பாடுபடுவோம்.

இந்நிகழ்ச்சியில், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ரேணுகா, திருமதி விஜயலட்சுமி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பட்டீஸ்வரம் கடைவீதியில் எழுச்சியோடு நடைபெற்ற கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்த்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர், கும்பகோணம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சு.க.முத்துசெல்வம், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜெ.சுதாகர், மாவட்ட மாநகரக் கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள், பேரூராட்சி நிர்வாகிகள்,ஒன்றிய ஊராட்சி கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள், பேரூர் வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள், ஒன்றிய கழக சார்பணி நிர்வாகிகள், பேரூர் கழக சார்பணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பி.எல்.ஏ2 நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.78.58 கோடி மதிப்பீட்டில்

## செம்மஞ்சேரி பகுதியில் கழிவுநீர் குழாய் இணைக்கும் பணி!

### சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 12–

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.78.58 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு – 200, செம்மஞ்சேரி பகுதிக்கான ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செம்மஞ்சேரி பகுதியில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், செம்மஞ்சேரி பகுதிகளில் 21.20 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 400 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 9.72 கி.மீ. நீளத்திற்கு 150 மி.மீ முதல் 500 மி.மீ. விட்டமுடைய கழிவுநீர் விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 09.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 827 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 2 கழிவுநீரிறைக்கும் நிலையங்கள், 5 கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 4.85 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சோழிங்கநல்லூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 51,114 பொதுமக்கள் பயன் பெறுவர் என்று சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.



திருப்பூர் வடக்கு மாவட்டம், வடக்கு & தெற்கு மாநகர கழகத்தின் சார்பில், பாண்டியன் நகரில் எல்லோருக்கும் எல்லாம் திராவிடமாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், மாநகர கழக செயலாளர்கள் மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார், டிகேடி மு.நாகராசன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக மாணவர் அணிச் செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### மலைப் பகுதிகளில் சித்த மருத்துவம் அதிக அளவில் விரும்பப்படுகிறது ! தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில்

# பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக்குழு வாகனங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

சேலம், மார்ச் 13 -

சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், முளுவி கிராமத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் சார்பில் 10 மாவட்டங்களுக்கு பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகனங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சேலம் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக நேற்று முன்தினம் (11.3.2024) தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் பழங்குடியின மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் விதமாக வசிக்கும் பகுதிகளுக்கே சென்று உரிய மருத்துவம் செய்திடும் உன்னத நோக்கில் நடமாடும் சித்த மருத்துவக் குழு புதிதாக உருவாக்கப்பட்டு உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு மாவட்டங்களில் சோதனை முயற்சியில் தொடங்கப்பட்ட நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகன திட்டம் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் காரமடையிலும், திருப்பூர் மாவட்டம் எரிசனாம்பட்டுவிலும், தருமபுரி மாவட்டம் சித்தேரியிலும், திண்டுக்கல் மாவட்டம் வடகொஞ்சியிலும், சேலம் மாவட்டம் நாகலூரிலும், தேனி மாவட்டம் ஆகமலையிலும், திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையிலும், திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம் கரியலூரிலும் மற்றும் திருச்சி மாவட்டம் செங்காட்டுப்பட்டி உச்சி ஆகிய தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு தலா ஒரு நடமாடும் சித்த மருத்துவக் குழு என்கிற வீதத்தில் பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக் குழு அடங்கிய வாகனம் புதிதாக உருவாக்கப்பட்டு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களின் நோய்களை நீக்கி, நல்வாழ்வு மேம்பட்டு நோயின்றி வாழவும் அவர்களின் வாழ்வு மேம்படவும் இவ்வாகனத்தில் ஒரு சித்த மருத்துவர், ஒரு மருந்தாளுநர், ஒரு பல்நோக்கு பணியாளர் என்கின்ற வகையில் நடமாடும் சித்த மருத்துவக் குழு மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று மருத்துவம் பார்க்க இருக்கின்றனர். இதேபோன்று மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், தொழிலாளரைத் தேடி மருத்துவம் திட்டம் போன்ற மக்களைத் தேடி மருத்துவர்கள் என்ற வகையில் கடைக்கோடி மக்களுக்கும் இதுபோன்ற மருத்துவத் திட்டங்களால் பயன்பெற முடிகிறது.

தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள சித்த மருத்துவ பிரிவுகளில் அரசின் மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படுகிறது. பெண்கள் கருவுற்ற நாள் முதல் தொடர்ந்து பிரசவம் நிகழும் வரை மற்றும் பிரசவத்திற்கு பின்னும் மொத்தம் நான்கு பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன.

சேலம் மாவட்டம், ஏற்காடு, நாகலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 91 பேர் புறநோயாளியாக பயன்பெற்று வருகின்றனர். அதேபோல், இங்குள்ள சித்த மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 62 பேர் புறநோயாளியாக பயன்பெற்று வருகின்றனர். ஆங்கில மருத்துவத்திற்கு இணையாக சித்த மருத்துவமும் மலைப் பகுதிகளில் அதிகளவில் விரும்பப்படுகிறது. இன்றைய தினம் சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், வாழவந்தி வட்டாரத்திற்குட்பட்ட நாகலூரில் ஒரு இலட்சம் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகனம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு நோய்களுக்குத் தேவைப்படும் சித்த மருத்துவ ஆலோசனைகளும் மருத்துவமும், நோயின்றி வாழ்வதற்கான தற்காப்பு வாழ்வியல் முறைகளுக்கான வழிகாட்டலும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் திருமதி மைதிலி கே.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சௌண்டம்மாள், மரு.யோகானந்த், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.க.பெ.இராமச்சந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திருமதி.புஷ்பராணி, ஏற்காடு ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி சின்ன வெள்ளை, நாகலூர் ஊராட்சிமன்றத் தலைவர் (பொ) குப்புசாமி, ஏற்காடு ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் சேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர்

## வா.சௌந்தர்ராஜன் விபத்தில் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 13–

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் நேற்று முன்தினம் (11.03.2024) இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு மரணமடைந்தார். மரணமடைந்த ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் அவர்களின் உடலுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

### ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில்

# உலக மகளிர் தின விழா!

## க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஜெயங்கொண்டம். மார்ச் 13-

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, தா.பழூர் க.சொ.க திடலில்,தா.பழூர்கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில், மகளிர் நலன் போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, "மகளிர் தின விழாவை" முன்னிட்டு மகளிர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், தா.பழூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சொ.க. கண்ணன் தலைமையில் நடைபெற்றதில், கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மகளிர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.ஆர்.ராமதுரை, அவைத்தலைவர் எஸ்.சூசைராஜ், பொருளாளர் த.நாகராஜன், ஒன்றிய துணை செயலாளர்கள் க.சாமிதுரை, இந்துமதி நடராஜன், ராஜேந்திரன், ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் காவேரி (ஆசிரியை ஓய்வு), லூசியா மேரி (விளையாட்டு ஆசிரியர்), மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஆர்.தமிழ்ச்செல்வன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இரா.சங்கர், ந.கார்த்திகைகுமரன், சம்பந்தம், தங்க.பிரகாசம், முனைவர் முருகானந்தம், எழிலரசி அர்ச்சுனன், தா.பழூர் நகர செயலாளர் கண்ணன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், மகளிர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.



அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் நேற்று முன்தினம் இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு மரணமடைந்தார். மரணமடைந்த ஒன்றியக் கழகச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் அவர்களின் உடலுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் 21 மாற்றுத் திறனாளிகளுக்கு அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் இலவச 3 சக்கர வாகனம் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் செல்வி, வடமலை பாண்டியன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அலுவலகம் இன்று திறப்பு!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

*நாமக்கல், மார்ச் 13-*

சேலம் மாவட்டத்தில் இருந்து, நாமக்கல் மாவட்ட தனியாக பிரிக்கப்பட்டு சுமார் 27 ஆண்டுகள் ஆகிறது. இருப்பினும் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கீழ் இதுவரை நாமக்கல் மாவட்ட கூட்டுறவு அமைப்புகள் செயல்பட்டு வந்தது. சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்து வந்தனர். இந்த நிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் இதற்கான முயற்சியை மேற்கொண்டார்.

தற்போது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் ஆகியோரின் அனுமதியின்பேரில் நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்குவதற்கான அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இதற்கான பூர்வாங்கப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் இராஜேஸ்குமார் எம்.பியை, நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவர் மற்றும் முதன்மை அமைப்பாளராக நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதையொட்டி நாமக்கல் மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் அறிவாலயம், பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராம லிங்கம், சேந்தமங்கலம் கே. பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி புதிதாக தொடங்க அரசு ஆணை வழங்கி பணிகள் துவங்க அனுமதி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி



ஸ்டாலின் அவர்களுக்கும், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களுக்கும், வனத்துறை அமைச்சர் டாக்டர். மதிவேந்தன் அவர்களுக்கும் இக்கூட்டத்தின் மூலம் நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டு றவு வங்கியின் முதன்மை அமைப்பாளர் மற்றும் தலைவராக பொறுப்பேற்கும் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை இக்கூட்டத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி.செய்தியாளர்களிடம் பேசும் போது, நாமக்கல் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை துவக்க தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதற்காக நாமக்கல் மாவட்ட மக்களின் சார்பில் அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதைத் தொடர்ந்து, நாமக்கல், மோகனூர் ரோடு கந்தசாமி கண்டர் பள்ளி அருகே உள்ள, மத்தியக் கூட்டுறவு வங்கியின் வட்டார அலுவலக வளாகத்தில், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா மற்றும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு இன்று மார்ச் 13ம் தேதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறுகிறது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்குகிறார். கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் அருளரசு வரவேற்கிறார். சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் மீராபாய் முன்னிலை வகிக்கிறார், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் விழாவில் கலந்து கொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைக்கிறார். நாமக்கல் மாவட்டத்தில், 400 க்கும் மேற்பட்ட கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. விரைவில் ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி அனுமதி பெற்று, நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனியாக செயல்படத் துவங்கும். இதன் மூலம் மாவட்ட விவசாயிகள், வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுவார்கள் என அவர் கூறினார்.

### அரியலூர் மாவட்டம் தா.பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர்

# வா.சௌந்தர்ராஜன் வாகன விபத்தில் உயிரிழந்தார்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் அஞ்சலி செலுத்தினார்!

*அரியலூர்,மார்ச் 13-*

அரியலூர் மாவட்டம் தா.பழூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சுத்தமல்லியைச் சேர்ந்த வா.சௌந்தரராஜன் இரண்டு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிர்திசையில் வந்த இரண்டு சக்கர வாகனம் மோதி ஒன்றிய கழக செயலாளர் சௌந்தர்ராஜன் உயிரிழந்தார்.

இது குறித்து விக்கிர மங்கலம் காவல்துறையினர் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒன்றிய செயலாளர் வா.சௌந்தரராஜன் வயது 60 இவர் முதலில் சுத்தமல்லி கிளைகழக செயலாளராகவும், பின்னர் மாவட்ட பிரதிநிதியாகவும், அதனை தொடர்ந்து 2016 ல் தா.பழூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளராகவும் பனியாற்றினார் பின்னர் 2022 ல் தா.பழூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளராக பணியாற்றி வந்தார்,அட்மா தலைவராகவும் பதவி வகித்து வந்தார், நேற்று தனது வயலுக்கு சென்று திரும்பிவரும் போது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி மரணமடைந்தார்.

இவரது துணைவியார் கண்மணி வயது 54 ,மகன்கள் வா.கார்த்திக் வயது 28, சிட்டிபாபு வயது 24 இரண்டு மகன்கள் உள்ளனர்.

அன்னாரின் உடலுக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து சுபா.சந்திரசேகர், கு.சின்னப்பா, மா. பிரபாகரன், எம்.பி.பால சுப்ரமணியன்,ச.அ.பெருநற்கிள்ளி, மு.கணேசன், சி.சந்திர சேகர், லதாபாலு, ஒன்றியகழக செயலாளர்கள் ஆலத்தூர் என்.கிருஷ்ணமூர்த்தி, தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், கோ.அறிவழகன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா. முருகேசன், வெ.கொ.கருணாநிதி, இரா.பாலு, சி.ஆர்.எம்.பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, ப. கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், கே.சி.லூயிக திரவன், தலைமை கழக பேச்சாளர் இளஞ்செழியன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். ஆர்.இராமராஜன், மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் முகா னந்தம், தங்கை.எழில்மாறன், அருண்சிவம், சிவரமேஷ், சுரேஷ்,

மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள் .



பழனி – திருவண்ணாமலைக்கு முதல்முறையாக புதிய வழித்தடத்தில் புதிய பேருந்தினை இ.பெ.செந்தில்குமார் பழநி சட்டமன்ற உறுப்பினர் இயக்கி வைத்தார். இப்பேருந்தானது பழனியிலிருந்து நண்பகல் 12 மணிக்கு புறப்பட்டு திண்டுக்கல், திருச்சி பெரம்பலூர் வழியாக மாலை 8.30 மணிக்கு திருவண்ணாமலையை சென்றடையும். அங்கிருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 6 மணிக்கு பழனி வந்து சேரும். இதற்கான பேருந்து கட்டணம் ரூ.350 ஆகும். மேலும் பழனி – அய்யம்பாளையத்திற்கு புதிய நகரப் பேருந்தினையும் இயக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் கோட்டமேலாளர் ரமேஷ், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கோட்ட மேலாளர் பழனி மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க முடியாத

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வுக்கு போராட்டம் தேவையா?

**போ**தைப் பொருளுக்கு எதிராக பி.ஜே.பி. மாநில தலைவர் அண்ணாமலையும் அ.தி.மு.க. தலைவர் எடப்பாடி பழனிச்சாமியும் கூட்டாக சேர்ந்து கொண்டு கள்ளத் தனமாக போராட்டம் நடத்துவதாக அறிவித்துள்ளார்கள் .

எடப்பாடி பழனிச்சாமி அவர்களே, 2018 நீங்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த விஜய பாஸ்கர் வீட்டில் அமலாக்கத்துறை சி.பி.ஐ. வருமான வரித்துறை மூன்று துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் சோதனை செய்து ஆவணங்களை கைப்பற்றி தெளிவாக சொன்னார்கள் .

குட்கா போதைப் பொருள் விற்பவர்களிடம் அதன் உரிமையாளர்களிடம் சோதனை செய்ததில் டைரி கிடைத்தது.

டைரியில் போதைப்பொருள் உரிமையாளர் பல கோடி ரூபாய் அமைச்சராக இருந்த விஜயபாஸ்கருக்கு கொடுத்ததாக எழுதியுள்ளார் . முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணாவுக்கும் பணம் கொடுத்ததாக டைரியில் எழுதி இருந்தார்கள் .

சி.பி.ஐ. வழக்கு தொடுத்துள்ளது. அமலாக்கத் துறையும் வழக்கு தொடுத்துள்ளது. வருமானவரித் துறையும் வழக்கு தொடுத்து, விஜய பாஸ்கரை பல முறை அழைத்து விசாரித்து வழக்கு நடத்திக் கொண்டிருக் கிறது .

இந்த நிலைப்பாட்டில் பி.ஜே.பி.க்கு ஆதரவாக எடப்பாடி இருந்ததால் தமிழக ஆளுநர் ரவி, விஜயபாஸ்கர் மீது வழக்கு தொடர்ந்து நடத்த சி.பி.ஐ. அனுமதி கேட்ட பொழுது காலம் தாழ்த்தி வந்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு சி.பி.ஐ. தொடர்ந்து வழக்கை நடத்த ஆளுநர் அனுமதி கொடுத்துள்ளார். வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. உண்மையாகவே எடப்பாடி பழனிச்சாமி அவர்களே நீங்கள் போதைக்கு எதிர்ப்பாக செயல்படுபவராக இருந்தால் போலி நாடகம் போடாமல் செயல்படுபவராக இருந்தால், முதலில் முன்னாள் அமைச்சர் விஜய பாஸ்கரை கட்சியில் இருந்து மேற்கொண்டு செயல்படாமல் இருக்க கட்சியில் இருந்து நீக்க தயாரா?

இந்த குட்கா போதை வழக்கு முடிந்து அவர் குற்றவாளி என்று தீர்ப்பு வந்தால் சிறைக்கு செல்லுபவரை நீங்கள் எதற்காக கட்சியில் வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு தைரியம் இருந்தால் அவரை கட்சியை விட்டு நீக்குங்கள்.

கட்சியில் போதைப் பொருள் விற்பவர்கள் இருக்கக் கூடாது என்றும் போதைப் பொருள் பயன்படுத்துபவர்களை கட்சியில் உறுப்பினர்களாக இருக்க வேண்டாம் என்றும் போதை அடிமை வாசிகளை கட்சியை விட்டு வெளியேற்றுவதற்கு தயாரா? தைரியம் இருக்கிறதா ? எடப்பாடி பழனிச்சாமி இதற்கு பதில் சொல்ல தயாரா?

**கோவை செல்வராஜ்**
கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர்



ஜாபர் சாதிக் என்பவரை உடனடியாக கட்சியை விட்டே நீக்கி விட்டோம்.

போதை பொருள் விற்பவர்களிடம் லஞ்சம் வாங்கிய வழக்கில் முதல் குற்றவாளி முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தான். ஏன் அவரை நீக்க பயம். வாங்கிய பணத்தில் யாருக்கு கொடுத்தார் என்ற உண்மையை சொல்லி விடுவார் என்ற பயமா?

பி.ஜே.பி. தலைவர் அண்ணாமலை அவர்களே, இந்தியாவை ஆளுவது இப்பொழுது பி.ஜே.பி. ஒன்றிய அரசுதான். எந்த ஒரு பொருளாக இருந்தாலும் வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கு கப்பல் வழியாக வருகிறபோது கலால் வரி, சுங்கவரி என எல்லா விதமான வரிகளையும் வசூல் செய்து விட்டு தான் பொருளை எடுத்து வர முடியும். அப்படிப்பட்ட நிலையில் இந்தியா முழுவதும் மாநில வாரியாக, மாவட்ட வாரியாக வெளிநாட்டில் இருந்து கடத்தி வரும் போதைப் பொருள்கள் இந்தியாவில் ஒரு நெட்ஓர்க் விற்பனை செய்கிற கடத்தல் பேர்வழிகளை எதனால் இதுவரை கைது செய்யவில்லை? நடவடிக்கை எடுக்கவில்லை?

கப்பலில் இருந்தோ விமானத்தில் இருந்தோ இறக்குமதி செய்து வெளியே எடுத்து வருகிற பொழுது அது போதை பொருளாக இருந்தால் யாரிடம் இருந்து வந்தது,

யாருக்கு வந்தது, யார் கொண்டு வந்தது, யார் பெயரில் வந்திருக்கிறது, இது எந்த ஊருக்கு கொண்டு செல்லப்படுகிறது என்பதை எல்லாம் முழுமையாக தெரிந்து நடவடிக்கை எடுத்து கடத்தி வரப்படுகிற நாட்டினுடைய போதை ஆசாமியையும், இந்தியாவில் யாருக்காக வருகிறதோ அந்த போதை பொருள்கள் கடத்தல் பேர்வழிகளையும் கைது செய்து சிறையில் அடைப்பதோடு மட்டுமல்ல கொண்டு வந்த போதைப் பொருள்கள் என்ன மதிப்பு என்பதை தெரிந்து அந்தப் பொருள்களை போதை தடுப்புப் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்திருக்க வேண்டும் ஏன் செய்யவில்லை?

கான்ட்லா துறைமுகத்தில் பலமுறை பல்லாயிரம் கோடிக்கு போதைப் பொருள்கள் கடத்தி வரப்பட்டு நாடு முழுவதும் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் செய்தியாக வெளிவந்தது.

அந்தப் போதைப் பொருள்கள் என்ன ஆனது? எங்கே இருக்கிறது? ஒன்றிய அரசிடம் இருக்கிறதா? தனியாரிடம் இருக்கிறதா? யாருக்காக வந்தது.

யார் கொண்டு வந்தது எந்த நாட்டில் இருந்து வந்தது என்ற எந்த ஒரு தகவலும் இல்லாமல் அப்படியே அதை அடக்கி விட்டார்கள்.

இதே போல்தான் இரண்டு மாதங்களுக்கு முன்பு கொச்சி துறைமுகத்தில் 25 ஆயிரம் கோடி ரூபாய்க்கான போதைப் பொருள் கண்டுபிடித்து பறிமுதல் செய்ததாக செய்தி வந்தது கொச்சி துறைமுகத்தில் வெளிப்படையாக மீண்டும் 25,000கோடி ரூபாய்க்கான போதைப் பொருள்கள் பறிமுதல் செய்ததாக செய்தி வந்தது.

கோழிக்கோட்டில் பல்லாயிரம் கோடி ரூபாய்க்கான போதைப் பொருள் பறிமுதல் செய்ததாக செய்தி வந்தது. குஜராத் மாநிலத்தில் உள்ள முந்த்ரா துறை முகத்தில்தான் போதைப் பொருள் கடத்தல் அதிகமாக நடந்துள்ளது.

21,000 கிலோ கடத்தப்பட்டது. மீண்டும் 9000கிலோ கடத்தல் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. உத்திரபிரதேசம், மகாராஷ்ட்ரா, அசாம், குஜராத், டெல்லி போன்ற இடங்களில் தான் அதிகமாக கடத்தல் போதைப் பொருள் விற்பனை நடக்கிறதாக தகவல் கிடைக்கிறது.

பல மாநிலங்களில் போதைப்பொருள் கடத்தி வந்ததை பறிமுதல் செய்வதாக செய்திகள் வந்தது. அந்தச் செய்திகள் எல்லாம் செய்திகளாகவே இருக்கிறது.

என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. யார் மூலமாக கொண்டு வந்தது.

இந்தியாவில் யாருக்காக வந்தது என்றெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட தகவல்கள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் ஒன்றிய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து போதைப் பொருள்களை இந்தியாவுக்குள் வராமல் இருப்பதற்கு ஏன் நட நடவடிக்கை எடுக்கவில்லை. எதனால் போதைப் பொருள்கள் வெளிநாட்டிலிருந்து வராமல் முழுமையாக தடுப்பதற்கு ஒன்றிய அரசால் கையாளாகவில்லையா அல்லது நடவடிக்கை எடுக்காமல் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுகிறார்களோ என ஒட்டுமொத்த இந்திய மக்களும் பயப்படுகிறார்கள் .

அச்சப்படுகிறார்கள் நாடு முழுவதும் வெளிநாட்டு போதைப் பொருள்கள் எப்படி இந்தியாவுக்குள் வந்தது என்று கேட்கிறார்கள். இதை தடுக்காதது பி.ஜே.பி. ஒன்றிய அரசே பதில் சொல்லுங்கள்.

ஒன்றிய அரசுதான் பதில் சொல்ல வேண்டும் இதைக் கேட்பதற்கு அண்ணாமலைக்கு தைரியம் இருக்கிறதா? வீர வசனம் பேசுகிற அண்ணாமலை முதலில் இந்தியா முழுவதும் வெளிநாட்டு போதைப் பொருள்கள் விற்பதற்கு அனுமதித்துக் கொண்டிருக்கிற உங்கள் கட்சியினுடைய ஒன்றிய அரசிடம் கேள்வி கேளுங்கள்.

அதை எதிர்த்து போராட்டம் நடத்துங்கள். அதை விட்டுவிட்டு, உண்மையான நடவடிக்கை எடுக்காத பி.ஜே.பி. அரசை கண்டிக்க கையாலாகாத அண்ணாமலை தமிழ்நாட்டில் தேர்தலுக்காக நாடகம் போடுகிறார்.

நாட்டிலேயே குஜராத்தில்தான் கடந்த ஐந்து ஆண்டுகளில் 93 ஆயிரம் கிலோ போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என குஜராத் மாநில அரசின் புள்ளி விவரங்கள் கூறுகிறது.

குஜராத்தில் 19 லட்சம் பேர் போதைக்கு அடிமையாக உள்ளனர். இதை இல்லை என்று அண்ணாமலை சொல்லுவாரா? தமிழ்நாட்டின் மீது வீண் பழி சுமத்தும் அண்ணாமலை பி.ஜே.பி. ஆளுகிற மாநிலங்களில் இப்படிப்பட்ட மிக மோசமான இளைஞர்களின் உயிரையே பலி கொள்ளுகிற போதைப் பொருள்கள் வெளிநாட்டிலிருந்து வரவழைத்து விற்பனை செய்கிறார்களே, அதை எல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு கையாலாகாத ஒன்றிய அரசு நமக்குத் தேவையா?

அண்ணாமலை அவர்களே தமிழ்நாட்டில் போதைப் பொருள் கடத்தி கைதான பி.ஜே.பி. நிர்வாகிகள் சரவணன் பா.ஜ.க. உறுப்பினர் ராஜேஷ் சென்னை 109வது வட்ட பா.ஜ.க. தலைவர், விஜய நாராயணன் மத்திய சென்னை பா.ஜ.க. செயற்குழு உறுப்பினர், விஜயலட்சுமி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் நெடுங்குன்றம் துணைத் தலைவர் , மணிகண்டன் பா.ஜ.க. தாழ்த்தப்பட்டோர் பிரிவு மண்டல தலைவர், ஆனந்தராஜ் திருவள்ளூர் மேற்கு மாவட்ட பா.ஜ.க. எஸ்.சி. எஸ்.டி. துணைத் தலைவர், ராஜா என்கிற வசூல்ராஜா காஞ்சிபுரம் மாவட்ட பா.ஜ.க. இளைஞர் நலன் அபிவிருத்தி பிரிவு செயலாளர் குமார் என்ற குணசீலன் பா.ஜ.க. உறுப்பினர், மணிகண்டன் திருச்சி பா.ஜ.க. உறுப்பினர் , லிவிங்கோ அடைக்கல் ராஜ் பெரம்பலூர் மாவட்ட பா.ஜ.க. முன்னாள் செயலாளர், சிதம்பரம் என்கின்ற குட்டி தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பா.ஜ.க. துணை தலைவர், ராஜா என்கிற சூரக்கோட்டை ராஜா பா.ஜ.க. விவசாய பிரிவு மாநிலச் செயலாளர், சத்யா என்கிற சத்யராஜ் பா.ஜ.க. உறுப்பினர், காசிராஜன் என்கிற காசி மதுரை பா.ஜ.க. இளைஞரணி செயலாளர், இத்துணை பேர் போதைப் பொருள் கடத்தலில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் இதற்கு பி.ஜே.பி. மாநில தலைவர் அண்ணாமலை அவர்களே அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கட்சியை விட்டு நீக்கி இருக்கிறீர்களா? பதில் சொல்லுங்கள்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் பி.ஜே.பி.யை விரட்டியடிக்க இன்னும் 60 நாட்கள் இருக்கிறது இந்தியாவில் கொடுமையான பி.ஜே.பி. ஆட்சியை அகற்றுவதற்கு இன்னும் 60 நாட்கள் இருக்கிறது என்பதை மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

### மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டி அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் பிரதமர்! அமைதியைப் பிளக்கும் சட்டம் கொண்டு வந்த

# பா.ஜ.க.வையும் - ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க.வையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!



சென்னை, மார்ச் 13-

**கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், "இப்போது, தேர்தலில் தனது அனைத்து அஸ்திரங்களும் எடுபடாமல் போன நிலையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலமாகக் கரையேற முயற்சிக்கிறார் பிரதமர் மோடி. தேர்தல் நேரத்தில் மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டி அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் பிரதமர்.**

**அமைதிமிகு இந்தியாவில் பிளவுமிகு சட்டத்தைக் கொண்டுவந்த பா.ஜ.க.வையும், அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அடிமை அ.தி.மு.க.வையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்! தக்க பாடம் புகட்டுவார் கள்!" என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :

'குடியுரிமை' என்ற மனிதநேயக் கொள்கையை மதம் இனத்தால் வேறுபடுத்தும் பிளவுவாதக் கொள்கையாக மாற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இசுலாமிய மதத்தவரையும், இலங்கைத் தமிழரையும் வஞ்சிக்கும் குடியுரிமை திருத்தச் சட்டமசோதாவை இயற்றியது ஒன்றிய பா.ஜ.க அரசு.

அதனை தி.மு.க. உள்ளிட்ட ஜனநாயகச் சக்திகள் கடுமையாக நாடாளுமன்றத்தில் எதிர்த்தன. ஆனால் பா.ஜ.க.வின் பாதம் தாங்கியான அ.தி.மு.க. ஆதரித்து வாக்களித்ததால்தான் அச்சட்டம் நிறைவேறியது. மக்கள் எதிர்ப்பு காரணமாக அந்தச் சட்டத்தை இதுநாள் வரையில் அமல்படுத்தாமல் வைத்திருந்தது பா.ஜ.க.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள், இந்திய நாட்டின் ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் போற்றிப் பாதுகாக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மைக் கோட்பாட்டினை நிலைநிறுத்தவும், இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019ஐ, இரத்து செய்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

இப்போது, தேர்தலில் தனது அனைத்து அஸ்திரங்களும் எடுபடாமல் போன நிலையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலமாகக் கரையேற முயற்சிக்கிறார் பிரதமர் மோடி. தேர்தல் நேரத்தில் மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டி அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் பிரதமர்.

அமைதிமிகு இந்தியாவில் பிளவுமிகு சட்டத்தைக் கொண்டு வந்த பா.ஜ.க. வையும், அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அடிமை அ.தி.மு.க.வையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்! தக்க பாடம் புகட்டுவார்கள்!

இவ்வாறு சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஈரோடு மாவட்டம் – சென்னி மலை ஊராட்சி ஒன்றியத்தில்

## 551 பயனாளிகளுக்கு ரூ.12.35 கோடியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

ஈரோடு, மார்ச் 13-

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கணுவாய் தனியார் காட்டேஜ், பசுவபட்டி அருகில் கலைஞர் மக்கள் சேவை முகாம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 551 பயனாளிகளுக்கு ரூ.12.35 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் கொரோனா தொற்று காலமாக இருந்தது. இச்சூழ்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் அந்தந்த மாவட்டங்களில் கொரோனா தொற்றில் இருந்து மக்களை பாதுகாத்திட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். மருத்துவமனைகளுக்கு நேரடியாக சென்று மருத்துவ வசதிகள், கூடுதலாக ஆக்ஸிஜன் வசதிகள், மருத்துவ பணியாளர்கள் நியமனம் உள்ளிட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவை மாவட்டத்தில் மருத்துவமனைக்கு நேரடியாக சென்று நோயாளிகளிடத்தில் நலம் விசாரித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000 என்கிற மகத்தான திட்டத்தை வழங்கியது வரை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு /பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநின்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வரும் புதுமைப்பெண் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, கூட்டுறவு வங்கிகளில் பயிர் கடன் மற்றும் நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, மக்களை தேடி மருத்துவம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும் கொரோனா தொற்று காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டு தொகையாகரூ.4,000/- வழங்கப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டு பல்வேறு துறைகளின் மூலம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, பெறப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களில் தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 20 ஆண்டுகள் காத்திருந்த விவசாயிகளுக்கு 1 இலட்சம் பம்பு செட்களுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியுள்ளது. அதே போல வேளாண்மைத்துறைக்கென தனி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு தற்போது பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், அனைத்து கிராமங்களிலும் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தொழிலாளர் நலத்துறையின் சார்பில் கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்டால் இதன் மூலம் பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6.03.2024 சென்னையில் நீங்கள் நலமா என்ற சிறப்பு திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள். இத்திட்டமானது, அலைபேசியில் மக்களுடன் தொடர்பு கொண்டு தீர்வு காணும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. அரசின் திட்டங்கள் மக்களுக்கு செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு திட்டங்கள் அனைத்தும் முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் இத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், முகாசிபிடாரியூர், முருங்கத்தொழுவு, எக்கட்டாம்பாளையம், குப்பிச்சிபாளையம் பசுவபட்டி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற கலைஞர் மக்கள் சேவை முகாம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து 6.03.2024 சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓட்டப்பாறை, புதுப்பாளையம், பாலத்தொழுவு, எல்லைகிராமம் மற்றும் கொடுமணல் ஆகிய ஊராட்சிகள் மற்றும் சென்னிமலை பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கலைஞர் மக்கள் சேவை முகாம்களில் சுமார் 3245 மனுக்கள் வரப்பெற்றதில் முகாம் நடைபெற்ற அன்றே 1268 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும் 551 மனுதாரர்களுக்கு நத்தம் பட்டா மாறுதல் ஆணைகளும், இணையவழி பட்டா மாறுதல் ஆணைகளும், அமைப்பு சாரா நல வாரிய அட்டைகளும், ரூ.12.35 கோடி மதிப்பீட்டில் மருத்துவ காப்பீட்டு அட்டைகளும் ரூ.12.35 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் பரிசீலனையில் உள்ளது. தகுதியுள்ள மனுக்களுக்கு தொடர்புடைய அரசு அலுவலர்கள் மூலம் நலத்திட்டங்கள் வழங்கப்படும்.

மேலும், இப்பகுதியில், நடைபெற்ற கலைஞர் மக்கள் சேவை முகாமில் நிறைவு பெற்ற மீதமுள்ள பகுதிக்கான தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் விரைவில் வழங்கப்படவுள்ளது. மக்களின் வளர்ச்சிக்காக அரசு அளிக்கின்ற நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் நல்லமுறையில் பெற்றுக் கொண்டு, பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் சென்னிமலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் 30 புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல குழுத் தலைவர் இல.பத்மநாபன், சென்னிமலை ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், மாவட்ட ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் எஸ்.ஆர்.எஸ் செல்வம் ஒன்றிய செயலாளர் பிரபு சென்னிமலை பேரூர் செயலாளர் எஸ்.எம். ராமசாமி ஒன்றிய துணை செயலாளர் கொடுமணல் கோபால் சென்னிமலை ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் காயத்ரி இளங்கோ சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாஸ்கர்பாபு, கு.கல்பனா, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் நடுஹட்டி ஊராட்சிற்கு உட்பட்ட பையங்கி பகுதியில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 5.இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையத்திற்கு சமையலறை கட்டிடத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொது மக்கள் உள்ளனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

## கும்முடிப்பூண்டி - பொன்னேரி தொகுதிகளில் நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், மார்ச் 13-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப் பூண்டி மற்றும் பொன்னோரி தொகுதகளில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு பல்வேறு ஊராட்களில் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மாவட்ட கழக செயலாளர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரை ஆற்றினர்.

ஆரணி பேரூர் தி.மு.க சார்பில் பேரூர் செயலாளர் ஆரணி பி.முத்து ஏற்பாட்டில் கழக கொடியேற்றி 100 தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவும் சீருடைகளும் வழங்கப்பட்டது.

மாவட்ட சுற்று சூழல் அணி அமைப்பாளர் மு.பாஸ்கர் ஏற்பாட்டில் மாநில துணை செயலாளர் பழ.செல்வகுமார் முன்னிலையில் எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் வடமதுரை ஊராட்சியில் உள்ள உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 500 மரக் கன்றுகள் வழங்கப்பட்டது. சின்ன செங்காத்தகுளத்தில் எழை எளியோர்க்கு 300 பிரியாணி, வேட்டி சேலை வழங்கப்பட்டது உடன் துணை அமைப்பாளர்கள விஜயபிரசாத், டி.ராஜாராம், விக்கரமன், யோகி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அமைப்பாளர் வி.பி.ரவிக்குமார் ஏற்பாட்டில் லச்சிவாக்கம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் பெரம்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 200 மாணவ மாணவிகளுக்கு புத்தகபை அறுசுவை உணவு வழங்கப்பட்டது. உடன் எஸ்.எம்.திருநாவுக்கரசு, எஸ்.பாபு, இளவரசு, பூபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைப்பு சார ஓட்டுநர் அணி மாநில துணை அமைப்பாளர் ஏ.ஆர். டி.உதயசூரியன் முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் கோல்டு டி.மணி ஏற்பாட்டில் ஊத்துக்கோட்டையில் 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள், 60 மகளீர்களுக்கு சேலைகள், 250 பேரூக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் துணை அமைப்பாளாகள் கே.வி. ஆனந்தகுமார், விஜயகுமார், ஏ.பி.ரமேஷ், பனப்பாக்கம் கே. ராஜேஷ், செபாஸ்டின், டி.ஆர்.கே.வாசு, சூர்யாஇளங்கோவன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஊத்துக்கோட்டை பேரூர் தி.மு.க சார்பில் பேரூர் செயலாளர் அபிராமி குமரவேல் ஏற்பாட்டில் ஊத்துக்கோடடை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப்புத்தகம், பேனா உணவு வழங்கப்பட்டது.

மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பா.சுகுமாறன் ஏற்பாட்டில் திருப்பாலைவனம் ஊராட்சியில் கழக கொடியேற்றி 500 நபர்களுக்கு பிரியாணி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மீஞ்சு+ர் ஒன்றிய குழு தலைவர் அத்திபட்டு ஜி. ரவி, பூமிநாதன், கருணாகரன், ஆறுமுகம், ரவிசந்திரன், ராஜேந்திரன், ரவி, மீனா அன்பு, கே.ராஜா, சி.எம்.ரமேஷ், மகளிர் அணி ஜெயசித்ரா, வெற்றி செல்வி, ஆலாடு அமுதா, நிர்மலா, ஜயப்பன், முனுசாமி, மணி, பாலிஸ்வரன், பாலசுப்பிரமணி, அருள், சிலம்பரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாவட்ட சிறுபான்மை நல உரிமை அணி சார்பில் பழவை முகமது அலவி ஏற்பாட்டில் பழவேற்காடு, கோட்டைகுப்பம், லைட் ஹவுஸ், தாங்கல் பெரும்புலம் ஊராட்சிகளில் 50 தூய்மை பணியாளர்களுக்கு தலா 25 கிலோ அரிசி, கழக தோழர்கள் இருவருக்கு தலா 5000 ரூபாய் நிதி உதவி 1000 பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் துணை அமைப்பாளர்கள் டி.ரகுமான்கான், அப்துல்கரீம், கே.தமின்ஷா பங்கேற்றனர்.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்ராஜன் பங்கேற்று சிறப்புரையாற்றினர். உடன் சி.எச். சேகர், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், டாக்டர். பரிளம்விஸ்வநாதன், மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஜான்(எ)பொன்னுசாமி, கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், எஸ்.ராமஜெயம், அப்துல்ரஷீத், குமரவேல், கே.வி.லோகேஷ், என். கிருஷ்ணமூர்த்தி, டி.சங்கர், க.சம்பத், தேசராணி தேசப்பன், ஜெயலலிதா சசிதரன், எஸ்.சுமன், டி.ஜெ.ஜி.தமிழரசன், எம். கேசவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் -

## அமைச்சர் ஐ.பெரியசாமி சம்பந்தி வத்தலக்குண்டு து.செல்லப்பாண்டி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 13-

கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சம்பந்தி வத்தலக்குண்டு து.செல்லப்பாண்டி அவர்கள் வயது (64) நேற்று முன்தினம் இரவு (11.03.2024) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த து.செல்லப்பாண்டி அவர்களுக்கு ராஜாத்தி என்ற மனைவியும் இரண்டு மகள்களும் உள்ளனர். இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

## ஆவடியில் திட்டப் பணிகள் துவக்கம்!

திருவள்ளூர் மார்ச் 13-

திருவள்ளூர் மாவட்டம்ஆவடி தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி 4 வது மண்டலத்தில் ரூ.1கோடியே 63.50 லட்சம்மதிப்பில், முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும், ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ தலைமையில் ஆவடி மாநகராட்சிக் குட்பட்ட தொகுதி நிதி மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம் மற்றும் பொது கல்வி நிதியின் கீழ் பணிகளின் திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இதில் இதில் 39ஆவது வார்டு காமராஜ் நகர் ஆறாவது தெருவில் உள்ள மாநகராட்சி பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 25. லட்சம் மதிப்பீட்டில் புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை , மற்றும் ராமலிங்கபுரத்தில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 15. லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமுதம் நியாய விலை கடை கட்டிடத்தை 14வது வார்டு அண்ணாநகர் மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடத்தை 21வது வார்டு டிரைவர்ஸ் காலனி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு சட்டமன்ற மேம்பட்டு நிதிலிருந்து 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை 22 ஆவது வார்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார்.



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் எம்.பரமசிவம் முன்னிலையில், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்.சீனிவாசன், என்.வினோத்குமார், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் எம்.எம்.முருகேசன் ஆகியோர் ஒருங்கிணைப்பில், மங்களாக்கோவிலில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் இறுதி ஆட்டத்தை துவங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்க பரிசுகளையும் கோப்பைகளையும் வழங்கினார். நிகழ்வில் எஸ்.எஸ்.கருப்பையா, எம்.ராஜா, சி.குறிஞ்சிவாணன், எம்.தவசுமணி, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், ஜானகிராமன், தாமரை குழ.பழனிவேல், எம்.பாலு, வி.கோவிந்தராசு, எஸ்.குஞ்சப்பா, கே.ராஜேந்திரன், கே.சுப்பிரமணியன், வி.எம்.ரவிச்சந்திரன், எம்.கோவிந்தன், டி.சரவணன், எஸ்.ஆர்.கலையரசன், எம்.நமச்சிவாயம், ஆர்.அசோக்குமார், எஸ்.ஆனந்த்ராஜ், டி.ராஜ்குமார், வி.செல்லபிள்ளை உள்ளிட்ட கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள், பார்வையாளராக பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.



ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் – ஆத்தூர் நகர்ப்புற புதிய பேருந்தினை திண்டுக்கல் 3 கிளை வழியாக பேருந்து குறியீடு எண் 516 D யை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி என்.பூங்கொடி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை ( லிமிட் ) மேலாண்மை இயக்குநர் ஆறுமுகம், திண்டுக்கல் மண்டலம் பொது மேலாளர் டேனியல் சாலமன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், உதவி மேலாளர் (வணிகம்) மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், போக்குவரத்துக் கழக அலுவலர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், முறையூர் ஊராட்சி பகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கலையரங்கத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் வ.மோகனச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.

## இந்தியா – மதச்சார்பற்ற கூட்டணி என்பதைக் காட்டிட – வரும்

# நாடாளுமன்றத் தேர்தலில் வழக்கறிஞர் அணி கடுமையாக உழைக்க வேண்டும்!

## “இந்திய ஜனநாயகம் படும் பாடு” குறித்த சட்டக் கருத்தரங்கில் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேச்சு!



சென்னை, மார்ச் 13- Indian Democracy at Cross Roads ” என்ற கூட்டத் தொடரில் “தடம் புரண்ட மதச்சார்பின்மையும் கூட் டாட்சியும்” என்ற தலைப் பில் தி.மு.க. சட்டத்து றைச்செயலாளரும் - மூத்த வழக்கறிஞருமான என். ஆர்.இளங்கோ, எம்.பி., ஆற்றிய உரை. வருமாறு:-

எனது அன்புக்குரிய அமைச்சர் ரகுபதி அவர்களே, தி.மு.க. சட் டப் பிரிவுக்கு என்றும் வழி காட்டியாகத் திகழும் ஆலந்தூர் பாரதி அவர் களே, சிறந்த வாசகரும் சிந்தனையாளருமான டி.கே.எஸ். இளங்கோவன் அவர்களே, சிறந்த நாடா ளுமன்றவாதி திருச்சி சிவா அவர்களே., மதிப்பிற்கு ரிய கட்சி நிர்வாகிகளே, அன்பான வழக்கறிஞர் சகோதர தோழிகளே, தோழர்களே, உங்கள் அனைவருக்கும் மாலை வணக்கம்.

திருச்சி சிவா, மற்றும் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் முதலமைச்சர் அவர்களிடம், கட்சியின் அரங்கக் கூட்டங்களை மீண்டும் நடத்துவதன் இன்றியமையாமை பற்றி விளக்கிக் கொண்டிருந்த போது, கழக தலைவர் அவர்கள் வழக்கறிஞர் அணிக்கு அந்த பணியை ஒப்படைத்தார். இந்த வாய்ப்பிற்காக தலைவ ருக்கு என் சார்பாகவும், வழக்கறிஞர் அணி சார்பா கவும் நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

1. “Indian Democracy at Cross Roads ” என்பது இந்த அரங்க கூட்டத் தொட ருக்கான தலைப்பு. இன் றைய முக்கிய உரை “தடம் புரண்ட மதச்சார்பின்மை யும் கூட்டாட்சியும்” என்ற தலைப்பில் அமைக் கப் பட்டுள்ளது.

2. நமது அரசியலமைப் பின் முகப்புரை மதச்சார் பின்மை பற்றி பேசுகிறது ஆனால் கூட்டாட்சி அதில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஆர்ட்டிக்கல் 1, “யூனியன் ஆஃப் ஸ்டேட்ஸ்” என்று கூறுகிறது, இது நமது தேசம் கூட்டாட்சி மாநிலம் என்பதை உறுதியாகக் குறிக்கிறது. டாக்டர் அம் பேத்கர் மற்றும் டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஆகி யோர் அரசியல் நிர்ணய சபையில் ஆற்றிய உரைக ளில் இருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் அம்பேத்கர்”. மத்தியமயமாக்கல் அதிக மாக இருப்பதாகவும், மாநிலங்கள் நகராட்சிக ளாகக் குறைக்கப்பட்ட தாகவும் கடுமையான புகார் தெரிவிக்கப்படு கிறது. இந்தக் கருத்து மிகைப்படுத்தல் மட்டு மல்ல, அரசியலமைப்புச் சட்டம் சரியாக என்ன சொல்கிறது என்ற தவறான புரிதலின் அடிப்படையி லும் அமைந்துள்ளது என் பது தெளிவாகிறது. மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான உறவைப் பொறுத்தவரை, அது சார்ந்துள்ள அடிப்படைக் கொள்கையை மனதில் கொள்ள வேண்டும். கூட் டாட்சி முறையின் அடிப் படைக் கொள்கை என்ன வென்றால், மத்திய அரசுக்கும் மாநிலங்களுக் கும் இடையே சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது என் பது மத்திய அரசால் உரு வாக்கப்படும் எந்தவொரு சட்டத்தின் மூலமாகவும் அல்ல, மாறாக அரசியல மைப்பின் மூலமாகவே. இதைத்தான் அரசியல மைப்புச் சட்டம் செய் கிறது. நமது அரசியல மைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள மாநிலங்கள் அவற் றின் சட்டமன்ற அல்லது நிர்வாக அதிகாரத்திற்காக எந்த வகையிலும் மையத் தைச் சார்ந்து இல்லை. இந்த விவகாரத்தில் மத் திய, மாநில அரசுகள் சமம். அத்தகைய அரசியல மைப்பை எப்படி மத்தியத் துவம் என்று அழைக்க முடியும் .வேறு எந்த கூட் டாட்சி அரசியலமைப்பி லும் காணப்படுவதை விட, அரசியலமைப்பு அதன் சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்தின் செயல்பாட்டிற்கான மிகப் பெரிய துறையை மையத்திற்கு ஒதுக்குகிறது. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப் படாமல் மையத்திற்கு வழங்கப்படலாம். ஆனால் இந்த அம்சங்கள் கூட் டாட்சியின் சாரமாக அமைவதில்லை. கூட் டாட்சியின் முக்கிய அடை யாளம், நான் கூறியது போல், அரசியலமைப்பின் மூலம் மத்திய மற்றும் மாநி லங்களுக்கு இடையே சட் டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்தை பிரிப்பதில் உள்ளது. இதுவே நமது அரசியலமைப்புச் சட்டத் தில் பொதிந்துள்ள கொள் கையாகும்.

அரசியலமைப்புச் சட்ட வரைவு மீதான அர சியல் நிர்ணய சபை விவா தங்களின் போது, டி.டி. கிருஷ்ணமாச்சாரியின் விமர்சனத்திற்கு அவர் அளித்த பதிலில், அவர் கூறியதாவது:

“ஒற்றையாட்சி அரசிய லமைப்பை உருவாக்குகி றோமா? இந்த அரசியல் சட்டம் டெல்லியில் அதி காரத்தை மையப்படுத்துகி றதா? பல்வேறு பகுதி களில் உள்ள மக்களின் நிலைப்பாட்டை பாது காக்க, அவர்களின் உள் ளூர் நிர்வாகத்தின் விஷ யங்களில் அவர்களின் குரல்கள் கேட்கப்படுவ தற்கு ஏதேனும் வழிகள் வழங்கப்பட்டுள்ளதா? இந்த அரசிய லமைப்பு ஒரு கூட்டாட்சி அரசியல மைப்பு அல்லாமல், அது ஒரு ஒற்றையாட்சி அரசிய லமைப்பு என்று உருவாக் கம் செய்வது மிகப் பெரிய குற்றச்சாட்டு என்று நான் நினைக்கிறேன். இந்திய அரசியல் சாசனம் கூட் டாட்சியாக இருக்க வேண்டும் என்று, பதி னெட்டு ஆண்டுகளுக்கு முன் லண்டனில் நடந்த வட்டமேஜை மாநாட்டில் மறைந்த நமது தேசப்பிதா (மகாத்மா காந்தி) முன் வைத்தார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த அரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியா இல்லையா என்பதைக் கண்டறிய மிகவும் எளிமையான சோதனை யைப் பயன்படுத்துமாறு எனது மதிப்பிற்குரிய நண் பரிடம் கேட்டுக்கொள்கி றேன். இந்த அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, நமது அரசியல மைப்பு ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு என்பதை வலியுறுத்துவேன். சட்ட மியற்றும் துறையிலும் நிர் வாகத் துறையிலும் கணிச மான மற்றும் முக்கியத்து வம் வாய்ந்த அலகுகளுக்கு அதிகாரம் வழங்கிய ஒன் றாக நமது அரசியல மைப்பு இருக்கிறது என்று நான் வலியுறுத்துகிறேன்.

கேசவானந்த பாரதி வழக்கில் நீதிபதி ரே பின் வருமாறு கூறியுள்ளார்.

“பத்தி 1920.ல் ஆர்ட்டி கள் 368 ல் குறிப்பிடப்பட் டுள்ள விதிகளை மாற்று வதற்கான மிகவும் கடுமை யான நடைமுறையின் பரிந்துரைக்கப்பட்டுள் ளது, அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் பகுதி III இன் விதியை விட மதிப் புமிக்கதாகக் கருதினர் என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டு கிறது. அவர்கள் அடிப் படை உரிமைகளை விட கூட்டாட்சிக்கு அதிக மதிப்பை அளித்தனர்.

5.மினெர்வா மில்ஸ் வழக்கில் நீதிபதி சந்திரசூட் அவர்கள் அனைத்து அதிகா ரங்களையும் மத்திய அரசு பறிக்க முடியாது.

ஒரு வரையறுக்கப் பட்ட அதிகாரத்தை பெற் றவர் , அந்த அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் வரையறுக்கப்பட்ட அதி காரத்தை வரம்பற்ற தாக மாற்ற முடியாது. என கூறி யுள்ளார்.

6. நாட்டின் சிறந்த நீதி பதிகளில் ஒருவரான நீதி பதி ரத்தினவேல் பாண்டி யன், எஸ்.ஆர். பொம்மை வழக்கில் பின்வருமாறு கூறியுள்ளார்.

“அரசியல் நிர்ணய சபைக்கு முன் இருந்த இரண்டு முக்கிய பிரச்சி னைகள், (1) மாநிலங்களி லிருந்து என்ன அதிகாரங் கள் பறிக்கப்பட வேண்டும்; மற்றும் (2) மாநிலத்தின் அதிகாரத்தை முற்றிலுமாக அகற்றாமல் எப்படி ஒரு தேசிய உச்ச அரசாங்கத்தை உருவாக்க முடியும். வலுவான மத் திய அரசை அமைப்பதை ஆதரிப்பவர்கள், அந்த அர சாங்கம் உச்ச அதிகா ரத்தை அனுபவிக்க வேண் டும் என்று வலியுறுத்தினர், அதே நேரத்தில் மாநிலங்க ளின் உரிமைகளை ஆதரிக் கும் மற்றவர்கள் மாற்று கருத்தை வெளிப்படுத்தி னர். இரு தரப்பினரும் மாறி மாறி தங்கள் பிரதிநிதித்துவங்களை வழங்கினர், ஆனால் இறுதி யில் அனைத்தையும் இழக்க நேரிடும் என்பதை உணர்ந்து, அவர்கள் ஒரு சமரசத்தை அடைந்தனர், இது முக் கிய பிரச்சினை யில் முட் டுக்கட்டையைத் தீர்த்தது.

7. ஜிண்டால் ஸ்டீல் வழக்கில் உச்ச நீதிமன்றம்,

”ஒரு கூட்டாட்சி அரசி யலமைப்பில், மாநிலத் தின் அதிகாரத்தைப் பாது காக்கும் நடைமுறைக்கு முன்னுரிமை அளிக்கப் பட வேண்டும். என்று குறிப்பிட்டுள்ளது.

### கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக செயல்படுகிறது!

8. இந்தப் பின்னணியில் தற்போதைய ஒன்றிய அரசு எப்படி கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக செயல்படுகிறது என்பதை நினைவுபடுத்துவது அவசி யம். ஆர்ட்டிக்கள் 370 ரத்து, ஒரே நாடு ஒரே தேர் தல், தேசிய கல்விக் கொள்கை, ஜி.எஸ்.டி. பங்கை தருவதில் பாரபட் சம், வெள்ள நிவாரண நிதி மற்றும் மாநிலத்தின் நிலு வைத் தொகை தரமறுப் பது, நிதி கூட்டாட்சி முறைக்கு எதிராக நடை பெறுகின்றன. பி.என். எஸ்., பி.என்.எஸ்.எஸ். மற் றும் பி.எஸ்.ஏ. போன்ற சட்டங்கள் மொழியியல் கூட்டாட்சிக்கு எதிரா னது. ED, CBI போன்ற ஏஜென்சிகளை தவறாகப் பயன்படுத்துவதும் அறி விக்கப்படாத நெருக்கடி நிலை. அந்த ஏஜென்சிகள் மூலம் மத்திய ஏஜென்சிக ளால் விசாரிக்கக் கூடாத விஷயங்கள் விசாரிக்கப் படுகின்றன. எதிர்க்கட்சி கள் ஆளும் மாநிலங்களில் இந்த முறைகேடு நடக்கி றது. இது கூட்டாட்சி முறைக்கு நேர் எதிரானது.

9. இப்போது மதச்சார் பின்மையை எடுத்து கொண்டால், இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாக மட்டுமே இருந்தது, இன் றும் மற்றும் என்றும் அவ் வாறே இருக்கும். கர்நாட காவை சேர்ந்த ஆளும் கட்சி எம்.பி ஒருவர், அரசி யல் சட்டத்தை மாற்ற பாஜக 400 இடங்களை பெற வேண்டும், நமது நாட்டை ஒரே மதம் கொண்ட நாடாக மாற்ற வேண்டும் என்று பேசு வதை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந் தேன். அது பகல் கனவில் கூட இந்த நாட்டில் நடக் காது. தமிழ் கலாச்சாரம் எப்போதும் மதச்சார்பற் றது. ஆயிரம் ஆண்டுக ளுக்கு முன், மாபெரும் சைவ சமயவாதியான முத லாம் இராஜராஜ சோழன், நாகப்பட்டினத்தில் உள்ள புத்த மடாலயத்திற்கு மானியம் அளித்தார். இதைப் பெருமையுடன் செப்புத் தகடுகளில் முத லாம் ராஜேந்திர சோழன் பதிவு செய்துள்ளார். அவை “ஆனைமங்கலம் செப்பேடுகள்” என்று அழைக்கப்படுகின்றன. இப்போது அவை நெதர் லாந்தின் லைடன் பல்க லைக்கழக அருங்காட்சிய கத்தில் இருப்பதால் அவை லைடன் செப்பேடுகள் என்று அழைக்கப்படுகின் றன. ஆயிரமாயிரம் ஆண் டுகளாக மதச்சார்பின்மை யைக் கடைபிடிப்பது நம் தமிழ் நாடு.

10. குடியுரிமை திருத் தச் சட்டம் 2019 போன்ற சட்டங்கள் மதச்சார்பின் மைக்கு எதிரானவை.

11. அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் அடிப்படைக் கட்டமைப் பையும் திருத்துவது கடின மாக இருப்பதால், அடிப்ப டைக் கட்டமைப்பு என்று எதுவும் இல்லை என்று தற்போதைய ஆட்சி ஒல மிடுகிறது. தேர்தலுக்குப் பிறகு பெரும்பான்மை அவர்களுக்குக் கிடைக்க போவதில்லை. பெரும் பான்மை இப்போது இருப்பதால், தங்களுக்கு தான் இறையாண்மை இருக்கிறது என்று நினைக் கிறார்கள். கேசவானந்த பாரதி வழக்கில் நீதியரசர் வார்த்தைகளை அவர்க ளுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

“வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அரசியல மைப்பு என்பது நீதிமன்றங்களால் அங்கீக ரிக்கப்பட்ட “சட்ட இறை யாண்மை” ஆகும், இருப் பினும் இறுதி “அரசியல்” இறையாண்மை “மக்களி டமே” இருக்கிறது.

12. இந்த மகத்தான நாட்டின் மக்களே, நாம், அரசியல் இறையாண்மை எங்களிடம் உள்ளது என் பதை, அந்த சிறிய EVMகள் மூலம் நமது சிறு விரல்கள் மூலம் காட்டுவோம். இந் தியா மதச்சார்பற்ற, கூட் டாட்சி நாடு என்பதை அவர்களுக்குக் காட்டு வோம். அதற்காக வழக்க றிஞர் அணி வரும் தேர்த லில் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கேட் டுக்கொள்கிறேன். எப் பொழுதெல்லாம் நமது அர சியலமைப்புச் சட்டம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி றதோ, அப்போதெல்லாம் அதை பாதுகாத்திருக் கிறோம். இந்திய மக்களா கிய நாம், I.N.D.I.A. கூட்ட ணிக்கு அந்தக் கடமையை மீண்டும் ஒருமுறை செய்ய வேண்டிய சந்தர்ப்பம் இது.

இவ்வாறு மூத்த வழக்க றிஞர் என்.ஆர்.இளங்கோ உரையாற்றினார்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் உடுமலை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மூலனூர் பேரூராட்சி 14வது வார்டு பகுதியில் 150க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண் டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மூலனூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சித் தலைவர் மக்கள் க.தண்டபாணி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் கார்த்திக், மூலனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் துரை தமிழரசு, தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் சு.முருகானந்தம், கொளத்துப்பாளையம் பேரூர்க் கழகச் செயலாளர் கே.கே.துரைசாமி, பேரூராட்சி துணைத் தலைவர் அ.பழனிச்சாமி, 6வது வார்டு செயலாளர் செல்வராஜ்,14 வார்டு செயலா ளர் குமார், கிறிஸ்டி, பழனி, ரமேஷ் உள்பட பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வருவது




**எதுக்கு அக்கா நன்றி ?**

– – – – –

- **ஓட்டல் சாப்பாட்டுக்கு**
- **ஜி.எஸ்.டி. வரி போட்டாரே மோடி அதுக்காகவா... ?**
- **உப்புக்கு ஜி.எஸ்.டி.யை ஏத்தி விட்டாரே அதுக்காகவா..?**
- **தயிருக்கும் வெண்ணெய் நெய்க்கும் வரி போட்டாரே அதுக்காகவா..?**
- **சுதந்திர இந்தியாவிலேயே முதன் முதலாக அரிசிக்கு ஜிஎஸ்டி போட்டு வயிற்றிலடிச்சாரே அதுக்காகவா..?**
- **சோறு பொங்குற அலுமினிய பாத்திரத்துக்கு வரிபோட்டாரே அதுக்காகவா..?**
- **எட்டணா சூடத்துக்கு 18% வரி போட்டு ஒத்தரூபா ஆக்கியுள்ளாரே! அதுக்காகவா?**
- **400 ரூபாவாயிருந்த கேஸை 1200 ஆக்கி தேர்தலுக்காக கொஞ்சம் விலை குறைச்சாரே அதுக்காகவா...?**
- **கியாஸ் மானியத்தை அனைவருக்கும் நிறுத்தி விட்டு மக்களுக்கு சேரவேண்டியதை கொள்ளையடிச்சாரே அதுக்காகவா..?**
- **எதுக்காக மோடிய நினைக்கணும் அக்கா...?**
- **கொஞ்சம் வெவரமா சொல்லுங்க..! வெவரங்கெட்டு உளறாதீங்க ....!**

## கோபிச்செட்டிபாளையம் - அரக்கோணம் அரசு மருத்துவமனைகளில்

# தலா 1.25 கோடியில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



ஈரோடு, மார்ச் 13- தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் வழிகாட் டுதலின்படி, ஈரோடு மாவட்டம் கோபிச்செட் டிபாளையம் அரசு மருத் துவமனை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோ ணம் அரசு மருத்துவ மனை ஆகிய 2 அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட் டில் புதிய ஒருங்கி ணைந்த பொது சுகாதார ஆய்வகம் நிறுவப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளை யம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப் பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு மருத்துவமனை ஆகிய 2 மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வ கம் அமைக்க மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத் துறையால் ஆணை வழங்கப்பட்டு தலா ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதி உதவியுடன் கட்டப் படும்.

இந்திய பொது சுகா தார புதிய தரநிலைக ளின்படி, ஒரே இடத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ மற் றும் பொது சுகாதார பரி சோதனைகளும் கிடைக் கும் வகையில், தொற்று நோய்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் தீவிரமாக பரவும் போது தேவையான பரிசோத னைகளை உடனடியாக மேற்கொள்ளும் வகையி லும் ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளை யம் அரசு மருத்துவமனை மற்றும் இராணிப் பேட்டை மாவட்டம், அரக்கோணம் அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வ கம் அமைக்கப்படும். மேலும், மாவட்டத்தில் உள்ள பிற மருத்துவ மனைகளுக்கு தலைமை பரிசோதனை ஆய்வகமா கவும் அமைக்கப்படு கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.



நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை, ஆம் ஆத்மி கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.என்.வசீகரன், மாநில மகளிர் அணி தலைவி ஸ்டெல்லா மேரி, வடசென்னை மாவட்டத் தலைவர் பாரூக், தென்சென்னை மாவட்டச் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் நேற்று (12.3.2024), காலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

### தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி ஆதரவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை அக்கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.கர்ணன் சந்தித்து தெரிவித்தார்!



**சென்னை, மார்ச் 13 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநில குழு மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு அளித்தனர்.**

இதுகுறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் தேசியச் செயலாளர்கள் எஸ்.சுரேஷ்தேவன், பி.எஸ்.தேவன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், நேற்று (12.3.2024), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்து தொகுதிகளிலும் பாடுபடுவதாக தெரிவித்தனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மாரச் 13 -

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சின்ன ஆனந்தவாடி கிராமத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம், ஜெயங்கொண்டம் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஜெயங்கொண்டம் சின்ன ஆனந்தவாடி மற்றும் சின்ன ஆனந்தவாடி ஜெயங்கொண்டம் புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி ஜெயங்கொண்டம் கிளை நகரப் பேருந்து, நகரப்பேருந்து வழித்தடம் எண் 010A, காலை 8.15 மணிக்கு ஜெயங்கொண்டம் ஆனந்தவாடி (வழி) உடையார்பாளையம், பரணம், இரும்புலிகுறிச்சி, சோழன்குறிச்சி வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும்.

இதேபோன்று காலை 9.15 மணிக்கு சின்ன ஆனந்தவாடி ஜெயங்கொண்டம் (வழி) சோழன்குறிச்சி, இரும்புலிக்குறிச்சி, பரணம், உடையார்பாளையம் வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும்.

இப்புதிய பேருந்து வழித்தடம் நீட்டிப்பால் சின்ன ஆனந்தவாடி, சோழன்குறிச்சி பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டல பொது மேலாளர் எஸ்.சக்திவேல், கோட்ட மேலாளர் (பெரம்பலூர்) ஆர்.ராமநாதன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்கா தாரிணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, ஒன்றியச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில் மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தொ.மு.ச. நிர்வாகிகள் பி.வி.அன்பழகன், சேகர், கொளஞ்சி, குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில்

# புதிய பள்ளிக் கட்டிடம்!

### இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

விழுப்புரம், மார்ச் 13 -

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம், காணை தெற்கு ஒன்றியம், தெளிமேடு ஊராட்சி, ஒன்றிய தொடக்கப்பள்ளியில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளி வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதில் ஒன்றியக் குழு பெருந்தலைவர் கலைச்செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்டக் கவுன்சிலர் சிவக்குமார், மாவட்ட நிர்வாகிகள் சுந்தரமூர்த்தி, கொத்தமங்கலம் சந்திரசேகர், ஒன்றிய நிர்வாகிகள் பழனி, செல்வம், செல்வராஜ், கருணாகரன், மதன், புனித ஐயனார், சிவராமன், நாராயணசாமி, ராஜேந்திரன், ஒன்றியக் கவுன்சிலர் ஜெயாகுமரன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் விமலா அறிவழகன், கோனூர் சிவசங்கர்,

கிளை செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, அரிகிருஷ்ணன், கிளைக் கழக நிர்வாகிகள் முருகன், தர்மராஜ், ஏழுமலை, கண்ணன், அன்பழகன், செல்வம், தங்கவேல், குமார், திருமால், முனுசாமி, மணி, பன்னீர் செல்வம், சுபாஷ், சிவகுமார், சக்கரவர்த்தி, கோபாலகிருஷ்ணன், எத்திராஜ், காமதேவன், செல்வம், வடிவேலு, வெங்கடேசன், கிரிதாசன், இளைஞர் அணி நிர்வாகிகள் குமரன், ரமணன், மணியரசன், கோனூர் நிர்வாகிகள் முருகன், செந்தில், மண்ணாங்கட்டி, கொத்தமங்கலம் நிர்வாகிகள் மணிகண்டன் காளிதாஸ், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் கதிரவன், ராகுல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## அம்பேத்கரை அவமதிக்கும் நீதிமன்றங்கள்!




பிராமண சங்க மாநாடுகளில் பங்கேற்று உரையாற்றுபவர்கள் எல்லாம் நீதி வழங்கினால், என்ன மாதிரியான தீர்ப்புகள் வரும் என்பதற்கு, சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியிருக்கும் சமீபத்திய தீர்ப்பு உதாரணமாக அமைகிறது. பல போராட்டங்களால் கிடைத்த ‘இட ஒதுக்கீடு உரிமை, மக்கள் நலத்திட்டங்கள் போன்ற முன்னெடுப்புகளால்தான் சாதிய வன்முறைகள் நடைபெறுகின்றன’ என்பது போன்ற வரிகள், சட்டத்துக்கு அப்பாற்பட்டு சொல்லப்படுகையில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கரை நீதிமன்றங்கள் புறக்கணிக்கத் தொடங்கிவிடுகின்றன.

நீதி அற்ற ஒருவர், பேசும் அநீதி நிறைந்த வார்த்தைகள் இவை. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் போன்ற நம் சமூகநீதித் தலைவர்கள் போராடி வென்ற உரிமைகளை அவமதிக்கும், இது போன்ற நீதிமன்றச் செயல்பாடுகளை விவாதிக்கும் விதமாக ‘சமூக அறிவியல் பேரவை’, ‘அம்பேத்கரை அவமதிக்கும் நீதிமன்றங்கள்: நாம் என்ன செய்யப் போகின்றோம்?’ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. புதன்கிழமை (இன்று) மாலை 6:30 மணி அளவில் ஆழ்வார்பேட்டை கவிக்கோ மன்றத்தில் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

நீதிமன்றங்களும் நம்மைக் கைவிடும்போது, நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வி அவசியமாகிறது.

## ஃப்ளாஷ்பேக்





இராமதாஸ்

### முகச்சவரத்துக்குப் பின் புகைப்படம்!

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதாக கழகம் அறிவித்தது. போராட்டத்தையொட்டி அறிஞர் அண்ணா அவர்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று கருதி, முன்கூட்டியே காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணாவின் இல்லத்தில் ‘மாலை முரசு’ நிருபராக இருந்த நானும் புகைப்படக் கலைஞர் அப்துல் காதரும் காத்திருந்தோம். அப்போது அண்ணா அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள ஆசை ஏற்பட்டது. தயங்கியவாறு அண்ணாவிடம் கேட்டபோது “நான் சவரம் செய்யாமல் இருக்கிறேன். மாலையில் எடுத்துக் கொள்ளலாம்” என்றார். அதேபோல மாலையில் சென்றதும், வாயில் படியில் நாற்காலி போட்டு அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். மறுநாள் அண்ணா கைது செய்யப்பட்டார்.

–இல.இராமதாஸ், திருவான்மியூர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மாபெரும் வெற்றி!

1971-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், கழகம் 203 தொகுதிகளில் போட்டியிட்டு, 184 தொகுதிகளில் வரலாறு காணாத வெற்றிபெற்றது. அதுவரையில், எந்தக் கட்சியாலும் முறியடிக்க முடியாத சாதனையை நிகழ்த்தி, தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது கழகம். முத்தமிழறிஞர் கலைஞர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக அரியணை ஏறினார். பேரறிஞர் அண்ணா இல்லாமல், கலைஞர் சந்தித்த முதல் தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **2**

## பூலேவின் அறைகூவல்!

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**



இன்றைய கல்வியின் பழங்கால வடிவம் தவமிருத்தல். பிராமணர்களுக்கு மட்டுமே தவமிருத்தல் எனும் தர்மம் அனுமதிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு, கல்வியறிவு இருந்ததால் நிர்வாகப் பதவிகளையும், மன்னர்களின் அரசவையில் அமைச்சர் பதவிகளையும் வகித்து வந்தனர். பிராமணர்கள் பெற்ற கல்வி அவர்களின் ஆதிக்கத்துக்கு வழி வகுத்தது.

இந்த நிலை, மன்னராட்சி காலத்தில் மிக உச்சமாக தொடர்ந்தது. கல்வி, ஆட்சி, அதிகாரம், கோவில் நிர்வாகம் என எங்கும் எதிலும் பிராமணர்களின் ஆதிக்கம்தான். தென்னிந்தியாவின் மிகச்சிறந்த மன்னராகத் திகழ்ந்த திப்புசுல்தானின் அரசவையில் கூட, பார்ப்பனர்களின் ஆதிக்கம் நிலவியது.

கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் வணிகம் செய்யும் நோக்குடன் இந்தியா வந்த ஆங்கிலேயர்கள், மெல்ல மெல்ல ஒவ்வொரு பகுதியாக வென்று ஒட்டுமொத்த இந்தியாவையும் ஆட்சி செய்யத் தொடங்கினர். இந்திய மக்களுக்கு கல்வி அளிக்கும் பொருட்டு, கொல்கத்தாவிலும் வாரணாசியிலும் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. ஆங்கில அரசின் நிதி உதவியோடு இவ்விரண்டு கல்லூரிகளும் செயல்பட்டன. வாரன் ஹேஸ்டிங் பிரபுவால் 1780-இல் உருவாக்கப்பட்ட கல்விக்கொள்கை, 1835-ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய ஆட்சியாளர்களால் பின்பற்றப்பட்டது.

இந்திய மக்களுக்கு கல்வி அளிப்பது தொடர்பான அனைத்து கூறுகளையும் ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட பொதுக் கற்பித்தல் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட மெக்காலே, 8 மாதங்கள் இந்தியக் கல்வியின் நிலையை ஆராய்ந்து, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் 1835-ஆம் ஆண்டு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மெக்காலே சமர்ப்பித்த கல்விக்குறிப்பை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு ஆங்கில இலக்கியம், அறிவியல் போன்ற பாடங்கள் இந்தியர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. அதன் பின்னர் கல்வி பரவலாக்கப்பட்டது என்று முழுமையாகச் சொல்ல இயலாவிட்டாலும், மிகக் குறைந்த மக்களேனும் கல்வி கற்கும் நிலை ஏற்பட்டது. நவீனக் கல்வி கற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினர், பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் கேள்வி கேட்டனர். பெரும்பான்மையான ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமைக்கான அறவழிப் போராட்டங்களைக் கையில் எடுக்க வைத்தது.

அவர்களில் முதன்மையானவர் மராட்டியத்தில் பிறந்த ஜோதி ராவ் பூலே. மெக்காலே கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்ட போது ஜோதி ராவ் பூலேவுக்கு வயது 8. கிறித்தவ மிஷனரிகளால் பூனாவில் தொடங்கப்பட்ட மராத்திய பள்ளியில் படித்த ஜோதி ராவ் நன்றாகக் கற்றுத் தேர்ந்திருந்தார். பள்ளிப் படிப்பு சமத்துவ உணர்வை ஜோதி ராவ் பூலேவிடம் உருவாக்கியது. தான் கற்ற கல்வியை மற்றவர்களுக்கும் கற்றுத் தரவேண்டும் என்ற உணர்வு பூலேவிடம் மேலோங்கியது. அதன்படி, 1848-இல், ஜோதி ராவ் பூலே ஒரு பள்ளி தொடங்கி, கல்வி மறுக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக, பெண்களுக்குக் கல்வி கற்றுத் தர ஆரம்பித்தார்.


தர்ம சாஸ்திர விதிகளின்படி சூத்திரர்களுக்கு கல்வி கற்கும் உரிமை இல்லை என்பதை உடைத்த பூலேவுக்கு எதிர்ப்புகள் கிளம்பின. இதனைக் கண்டு அஞ்சாத பூலே, “என்னைப் பின்பற்றுங்கள், இனியாவது தடுமாறாதீர்கள், மனுவின் கட்டளைகள் ஒழியட்டும், கல்வி உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். நம்பிக்கை கொண்டு என்னைப் பின்பற்றுங்கள்” என்று மனுதர்மம் வகுத்த பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வை ஒழிக்க அறைகூவல் விட்டார்.

...குரல் ஒலிக்கும்

# மாநாடு

ர.பிரகாசு **2**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




“ஓர் அடிமைக்கு அவன் அடிமை என்பதை முதலில் உணர்த்து, பிறகு அவன் தானாகவே கிளர்ந்து எழுவான்” என்றார் புரட்சியாளர் அம்பேத்கர். பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடுகளால் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களிடம் பேசிப் பேசி, எழுதி எழுதி, அடிமை விலங்கு தகர்ந்து போக பாடுபட்ட இயக்கம் திராவிட இயக்கம். மக்களிடம் உரையாடுவதற்கு, திண்ணைப் பிரச்சாரங்கள், தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் என எண்ணற்ற வழிமுறைகளைக் கையிலெடுத்தது திராவிட இயக்கம். அதில் என்றைக்கும் தனிச் சிறப்புக்குரியவை ‘மாநாடுகள்’.

தமிழ்நாட்டு மக்களை ஒரு பெருந்திரள் அரசியலுக்குள் இழுத்து வந்தவை இந்த மாநாடுகள்தான். அந்த மாநாடுகளின் வரலாற்றை, திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சியின் முதல் மாநாட்டில் இருந்து தொடங்குவதே பொருத்தமானது. 1916-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நீதிக்கட்சி, குறுகிய காலத்திலேயே மக்கள் செல்வாக்கைப் பெறத் தொடங்கியது. கல்வி, வேலைவாய்ப்பில் பார்ப்பனரல்லாத மக்களின் நிலையை எடுத்துரைக்கும் விதமாக, 1917-ஆம் ஆண்டின் இறுதியில் கோவை, ஆந்திரா, இராயலசீமா, நெல்லை, சேலம், சென்னை ஆகிய பகுதிகளில் **‘பார்ப்பனரல்லாதோர் மாநாடு’** என்ற பெயரில் தொடர் மாநாடுகளை நடத்தியது. இந்த மாநாடுகளின்போது தான் நீதிக்கட்சியின் **‘தராசு சின்னம்’** பொறித்த சிவப்புக் கொடிகள் நாடெங்கும் பறக்கத் தொடங்கின.

அவற்றில் முதல் மாநாடு கோவை ஒப்பணக்காரத் தெருவில் இருந்த நாடகக் கொட்டகையில் 1917-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19, 20 ஆகிய 2 நாட்கள் பனகல் அரசர் தலைமையில் நடைபெற்றது. ‘இந்த மாநாட்டைக் கூட்டியிருப்பவர்கள் தேசத்துரோகிகள், பிற்போக்காளர்கள், கெட்ட எண்ணத்துடன் கூட்டியிருக்கிறார்கள்’ என்றெல்லாம் இன எதிரிகள் வதந்தி பரப்பினர். ஆனால், மக்கள் கூட்டத்தால் நாடகக் கொட்டகை நிரம்பியது.

நீதிக்கட்சியின் முன்னோடித் தலைவர்களான டி.எம்.நாயர், சி.நடேசனார், பனகல் அரசர் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் சிறப்புரையாற்றினர். மொத்தம் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நீதிக்கட்சியின் நோக்கத்தை விளக்கி, இந்த மாநாட்டில் பனகல் அரசர் ஆற்றிய விரிவான உரை வரலாற்றில் மிக முக்கியமானது.

“ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மட்டுமே முன்னேற்றமடைவது முன்னேற்றம் இல்லை. எல்லா சமூகங்களும் சம அந்தஸ்தும், சம சந்தர்ப்பங்களும் பெற வேண்டும். நமது இயக்கம் அந்த இலட்சியத்தை முன்னிறுத்தியே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது” என்றார். அந்தப் பிரகடனம்தான் இன்றைக்கும் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற திராவிட மாடலாக முன்னிறுத்தப்படுகிறது. அதனால் முதல் மாநாடே இன எதிரிகளுக்கு மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியது.

,,,கூட்டம் திரளும்

## திராவிடத்தால் வாழ்கிறோம்

416

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131